சுண்டுக்குளி கிளை நூலகம்

Registered as a News Paper in Sri Lanka

பக்கங்கள் 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 | பிரமோதூத ஞு மீ ஆடி 3 ஆம் உ | வியாழக்கிழமை | (19 - 07 - 1990) | ஹிஜ்ரி 1410 | ஜுல்ஹஃ 25 | சை 151

## போதைவஸ்து வேட்டையில் பெண்புலிகள் சாதனை!

(யாழ்ப்பாணம்)

பன்னிரெண்டாயிரம் ரூபா பெறுமதியான போதைவஸ்தை நேற்று முன்தினம் இரவு விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணியினர் கைப்பற்றினர். யாழ். றோட்டில் வசிக்கும் இராசதுரை (முள்ளன்) என்பவரது வீட்டில் இருந்தே இப் போதைப்பொருள் மகளிர் முன்னணியினரால் கைப்பற்றப்பட்டது. அண்மைக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் பெரியளவில் போதைவஸ்து கைப்பற்றப்பட்டது இதுவேயாகும். இப்போதைவஸ்தைக் கைப்பற்றிய விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணியினர் மக்களுக்கு இது தொடர்பாக கோரிக்கை ஒன்றையும் விடுத்துள்ளனர். இளைய சமுதாயத்தின் எதிர்காலம் கருதி இக் கொடிய (4ஆம் பக்கம் பார்க்க)

# அம்பாறையிலும், மாங்குளத்திலும் புலிகள் - அரச படைகள் மோதல் தொடர்கிறது

# அம்பாறையில் மினி ராணுவ முகாம் அழிப்பு!

## றேகன் வீர மரணத்தின் பின் நடந்த வீராவேசத் தாக்குதல்!

(அம்பாறை)

அம்பாறை 35ஆம் கிராம இராணுவ மினி முகாம் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது. மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டஇராணுவ பொறுப்பாளர் றேகனின் மரணத்தை தொடர்ந்து இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

அம்பாறை மாவட்ட 35ஆம் கிராம மினி முகாமிலிருந்து 16-7-90 அன்று வெளியே வந்த சிறிலங்காப் படையினருடன் பாலையடி வெட்டை எனும் இடத்தில் நடைபெற்ற மோதலில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட இராணுவ பொறுப்பாளர் றேகன் வீர மரணம் அடைந்தார்.

சுமார் 45 நிமிடங்களுக்கு மேலாக நடந்த இம் மோதலில் சிங்கள இராணுவ உயரதிகாரி ஒருவர் கொல்லப்பட்டார். மேலும்இரு இராணுவத்தினரும் காயமடைந்தனர்

இதைத் தொடர்ந்து 17ஆம் திகதி அதிகாலை 2.20 மணியளவில் 35ஆம் கிராம மினி (4 ஆம் பக்கம் பார்க்க)

## ரஞ்சனுக்கு மரணதண்டனை

(கொழும்பு)

ஜே.வி.பியினரால் தென்னிலங்கையில் மீண்டும் பரவலாக ஸ்ரீலங்கா அரசுக்கு எதிரான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இந்த சுவரொட்டிகளில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னாவுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## படையினர் மூவர் பலி

(கொழும்பு)

முல்லைத்தீவு கடற்கரைப் பகுதியில் தமிழீழவிடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலின் நிமிர்த்தம் மூன்று படையினர் கொல்லப்பட்டதாக இலங்கை அரசதரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழர் மீதான இராணுவ

## அடக்குமுறையைக் கண்டித்து பாண்டிச்சேரியிலும் ஹர்த்தால்

(பாண்டிச்சேரி)

இலங்கையில் அப்பாவித் தமிழ் மக்கள் இராணுவத்தினரால் கொன்று குவிக்கப்படுவதைக் கண்டித்து தமிழகத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாநிலம் தழுவிய மாபெரும் ஹர்த்தால் நடைபெறவுள்ள இதேதினத்தில் பாண்டிச்சேரியிலும் கடையடைப்பு, பொது வேலை நிறுத்தம், ஹர்த்தால் என்பன மேற்கொள்ளப்படவுள்ளதாக புதுச்சேரி முதல் அமைச்சர் திரு. டி. இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

பாண்டிச்சேரியில் நாளை வெள்ளிக்கிழமை நடத்தப்படவுள்ள இந்த ஹர்த்தால் குறித்து நிருபர்கள்மத்தியில் கருத் (4 ஆம் பக்கம் பார்க்க)

கிளிநொச்சியில்

## அகதிகளுக்கு இரண்டாம் கட்ட உணவு விநியோகம்

(கிளிநொச்சி)

சாங்க அதிபர் திரு. க.

# மாங்குளத்தில் மாண்டவர் அதிகம் அரசபடையினரே!

## இருதினங்களில் ஐந்து புலிகள் வீரமரணம்

(மாங்குளம்)

மாங்குளத்தில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் தொடர்ந்து இரண்டு நாட்களாகக் கடும்சண்டை நடைபெற்று வருகின்றது. இச் சண்டையில் பதினைந்து இராணுவத்தினருக்குமேல் கொல்லப்பட்டதாகவும் அதற்கு மேலான எண்ணிக்கை உடையவர்கள் காயமடைந்ததாகவும் தெரிகின்றது.

இச் சண்டையில் முதல்நாளில் நான்கு விடுதலைப் புலிகளும் நேற்று ஒருவருமாக ஐந்துபேர் வீரமரணம் அடைந்துள்ளனர். முதல்நாள் சண்டையில் அதிநவீன ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதையும் அவை தொடர்பான விபரங்களும் நேற்றைய ஈழநாதம் பத்திரிகையில் வெளிவந்தது தெரிந்ததே. முதல் நாள் சண்டையில் நந்தன், குணம், மிதுனன், கபில் ஆகியோர் வீரமரணமடைந்தவராவர். (4 ஆம் பக்கம் பார்க்க)

அரச அதிபர் ஊடாக

## கல்விப் பணிப்பாளரிடம் ஆசிரியர் சம்பளப் பணம்

ஜூன் மாத ஆசிரியர்களின் சம்பளத்தையும், இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கான சம்பள முற்பணத்தையும் வழங்குவதற்கான மொத்தப் பணத்தொகையை யாழ். அரசஅதிபர் ஊடாக யாழ். கல்விப் பணிப்பாளருக்கு கல்வி அமைச்சு அனுப்பி வைத்துள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கு கல்வி அமைச்சு அறிவித்துள்ளதாக சங்கத்தின் பொதுச்செயலாளர் க. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இன்று வியாழக்கிழமை சங்கத்தின் நிர்வாகிகள், கல்விப் பணிப்பாளரையும் கணக்கா (4 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்று சில பகுதிகளுக்கு சுழற்சி முறை மின்சாரம்

(யாழ்ப்பாணம்)

நேற்று யாழ். நகரில் சில பகுதிகளுக்கு சுழற்சி முறையில் மின்சாரம் வழங்கப்பட்டது. இதன்போது ஏற்பட்ட அதிக பழு காரணமாக ஜெனரேட்டரில் கோளாறு ஏற்பட்டுள்ளதனால் தொடர்ந்து வேறு பகுதிகளுக்கு மின்சாரம் வழங்க முடியாமல் போனதாக மின்சார இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் தற்பொழுது திருத்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் இத் திருத்த வேலைகள் முடிந்த பின்னர் தொடர்ந்து சுழற்சி முறையில் இரண்டு நாட்களுக்கு ஒருமுறை ஒரு மணி நேரம் என்ற அடிப்படையில் மின்சாரம் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ம)

## முல்லைத்தீவில் தற்காப்புபயிற்சி; இளைஞர்களுக்கு அழைப்பு

16-7-90 அன்று வெளியே வந்த சிறிலங்காப் படையின மோதலில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட இரா

சுமார் 45 நிமிடங்களுக்கு மேலாக நடந்த இம் மோதலில் சிங்கள இராணுவ உயரதிகாரி ஒருவர் கொல்லப்பட்டார். மேலும்இரு இராணுவத்தினரும் காயமடைந்தனர்

இதைத் தொடர்ந்து 17ஆம் திகதி அதிகாலை 2.20 மணியளவில் 35ஆம் கிராம மினி

(4 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கைத் தமிழர் மீதான இராணுவ

## அடக்குமுறையைக் கண்டித்து பாண்டிச்சேரியிலும் ஹர்த்தால்

(பாண்டிச்சேரி)

இலங்கையில் அப்பாவித் தமிழ் மக்கள் இராணுவத்தினரால் கொன்று குவிக்கப்படுவதைக் கண்டித்து தமிழகத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாநிலம் தழுவிய மாபெரும் ஹர்த்தால் நடைபெறவுள்ள இதேதினத்தில் பாண்டிச்சேரியிலும் கடையடைப்பு, பொது வேலை நிறுத்தம், ஹர்த்தால் என்பன மேற்கொள்ளப்படவுள்ளதாக புதுச்சேரி முதல் அமைச்சர் திரு. டி. இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

பாண்டிச்சேரியில் நாளை வெள்ளிக்கிழமை நடத்தப்படவுள்ள இந்த ஹர்த்தால் குறித்து நிருபர்கள்மத்தியில் கருத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றும் கொழும்புக்கு ஏழு பஸ்களில் பயணம்!

(நல்லூர்)

இருநூறுக்கும் மேற்பட்ட கொழும்பு பயணிகள் நேற்று முத்திரைச் சந்தையிலிருந்து கொழும்புக்குப் பயணமாயினர். நேற்று ஆறரைமணியளவில் ஆறு மினிபஸ்களிலும் ஒரு தனியார் போக்குவரத்து பஸ்ஸிலும் இவர்களுடைய பயணம் ஆரம்பமானது. இவர்களை வழியனுப்ப ஏராளமான மக்கள் முத்திரைச்சந்தியில் கூடி நின்றனர்.

மினிபஸ்கள் பயணம் ஆரம்பிக்கப்படும் முன்னர் பயணிகளுக்கு வடபிராந்திய மினி பஸ் சங்கத் தலைவர் பொன். மதிமுகராசா சில அறிவுறுத்தல்களை வழங்கி வழியனுப்பி வைத்தார்.

அவருடைய அறிவுறுதல்

(4ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை கடற்படை சூடு; இரு இந்திய மீனவர் காயம்

(சென்னை)

ஸ்ரீலங்கா அரச கடற்படையினர் கடலில் வைத்து நடத்திய இரு வெவ்வேறு துப்பாக்கிப் பிரயோக சம்பவங்களில் இரண்டு இந்திய மீனவர்கள் பலத்த காயமடைந்துள்ளார்கள்.

நேற்று முன்தினம் இரவு இந்த துப்பாக்கிப் பிரயோக சம்பவங்கள் இடம் பெற்றன முதலாவது சம்பவம் இராமேஷ்வரம் கடற்கரை பகுதியிலும் மற்றைய சம்பவம் கச்சதீவுவுக்கு அருகிலும்இடம் பெற்றுள்ளன. சம்பவ நேரத்தில் நூற்றுக்கு மேற்பட்ட

(4 ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு - கிழக்கு

## வைத்தியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த கோரிக்கை

வடக்கு கிழக்கில் சேவையில் உள்ள அரசாங்க வைத்தியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கொழும்பில் இயங்கும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் ஜெனிவாவில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

கடந்த காலங்களில் இப்பகுதிகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போதுவைத்தியர்கள்கொலை செய்யப்பட்டதைநினைவூட்டி தற்போதைய சூழ்நிலையில் வைத்தியர்கள் என்ன நிலையில் இருக்கிறார்கள் என்பதையும் அவர்களது எதிர்கால பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் இக்கடிதத்தில் கோரப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### கைதான ஆறு தமிழர் எங்கே?

(திருமலை)

சீனன்குடாவில் வைத்து ஸ்ரீலங்கா படையினர் கைதுசெய்த ஆறு தமிழர்களின்நிலைமைகள்குறித்து எதுவித தகவல்களும் இல்லை என இவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் மூவர் பலி

(கொழும்பு)

முல்லைத்தீவு கடற்கரைப் பகுதியில் தமிழீழவிடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலின் நிமிர்த்தம் மூன்று படையினர் கொல்லப்பட்டதாக இலங்கை அரசதரப்பில் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சியில்

## அகதிகளுக்கு இரண்டாம் கட்ட உணவு விநியோகம்

(கிளிநொச்சி)

வெளிமாவட்டங்களைச் சேர்ந்த அகதிகளுக்கு 2ஆம் கட்ட உணவு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது.

வெளிமாவட்டங்களிலிருந்து கிளிநொச்சி மாவட்டத்திற்கு அகதிகளாக வந்துள்ள குடும்பங்களுக்கு மட்டுமே தற்போது 2ஆம் கட்ட உணவு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டது என கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் மேலும் தெரிவித்ததாவது; தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்திடமும், செஞ்சிலுவைச் சங்கத்திடமும் உதவிகளைக் கேட்டுள்ளேன்.

அகதிகள் புனர்வாழ்வுக் கழ

(4 ஆம் பக்கம் பார்க்க

## சுழற்சி முறை மின்சாரம்

(யாழ்ப்பாணம்)

நேற்று யாழ். நகரில் சில பகுதிகளுக்கு சுழற்சி முறையில் மின்சாரம் வழங்கப்பட்டது. இதன்போது ஏற்பட்ட அதிக பழு காரணமாக ஜெனரேட்டரில் கோளாறு ஏற்பட்டுள்ளதனால் தொடர்ந்து வேறு பகுதிகளுக்கு மின்சாரம் வழங்க முடியாமல் போனதாக மின்சார இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் தற்பொழுது திருத்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் இத் திருத்த வேலைகள் முடிந்த பின்னர் தொடர்ந்து சுழற்சி முறையில் இரண்டு நாட்களுக்கு ஒருமுறை ஒரு மணி நேரம் என்ற அடிப்படையில் மின்சாரம் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ம)

## இளம் பெண்மீது தாக்குதல்

(திருமலை)

சீனன்குடாவில் நடமாடும் சிறிலங்கா ஊர்காவற்படையினர் சசி என்ற இளம் பெண்ணை கடுமையாகத் தாக்கியுள்ளனர். இச்சம்பவம் கடந்த 13ஆம் திகதி இடம் பெற்றது.

பர் ஊடாக யாழ். கல்விப் பணிப்பாளருக்கு கல்வி அமைச்சு அனுப்பி வைத்துள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கு கல்வி அமைச்சு அறிவித்துள்ளதாக சங்கத்தின் பொதுச்செயலாளர் க. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இன்று வியாழக்கிழமை சங்கத்தின் நிர்வாகிகள், கல்விப் பணிப்பாளரையும் கணக்கா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் தற்காப்புபயிற்சி; இளைஞர்களுக்கு அழைப்பு

(முல்லைத்தீவு)

போர்க்கால நடவடிக்கையின் ஒரு கட்டமான மாணவர், இளைஞர் தற்காப்புப் பயிற்சி முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெற உள்ளது. இந்தப் பயிற்சியில் பங்குபற்ற விரும்பும் முல்லை அனைத்துப் பாடசாலை மாணவர்களும், இளைஞர்களும் விடுதலைப்புலிகளின் மாணவர் இயக்கப் பொறுப்பாளருடன், உடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

இன்றைய போராட்ட காலத்தில் எமது தமிழ் இனமும் பாரம்பரிய பிரதேசமும், மாணவர் சமுதாயமும் கல்வி வளர்ச்சியும் அழிந்துகொண்டிருக்கின்றன. அழிவிலிருந்து காப்பாற்ற ஆயுதப் பயிற்சியில் இன்றே கலந்துகொண்டு உங்கள் பங்களிப்பைச் செய்யுங்கள் என முல்லை மாவட்ட மாணவர் இயக்கப் பொறுப்பாளர் சஞ்சீவி தெரிவித்தார். (58)

## மேலும் மூன்று சடலங்கள்

(யாழ்ப்பாணம்)

நேற்றும் மூன்று சடலங்கள் கரைஒதுங்கின. இரு சடலங்கள் வேலணை துறைமுகப் பகுதியிலும் ஒருசடலம் புங்குடுதீவுக் கரையோரப்பகுதியிலும் கரைஒதுங்கின.

வேலணையில் கரைஒதுங்கிய இரு சடலங்களில் ஒன்று ஆணாகும் ஒன்று பெண்ணாகும். புங்குடுதீவில் கரைஒதுங்கிய சடலம் ஆணினுடையதாகும். கரைஒதுங்கிய ஒரு ஆணின் சடலத்தின் சேட் பொக்கட்டில் இந்தியப்பணம் இருந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

குடும்பத்தில் 27 பேரை பலிகொடுத்து

## களம்பல கண்ட 26 வயது ரேகன் களத்தில் வீரமரணம்!

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் பாளையடிவெட்டை எனும் இடத்தில் 35ஆம் ஊர் இராணுவ முகாமிலிருந்து வெளியேறிவந்த இராணுவத்துடனான நேரடி மோதலில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட துணைத்தளபதி லெப்-கேணல் ரேகன் (இராசையா சிற்றம்பலம், வயது 26)

(4ஆம் பக்கம் பார்க்க)

மன்னார் மாவட்டத்தில்

## முப்படைகளின் தாக்குதலால் ஒரு லட். மேற்பட்ட அகதிகள்

(மன்னார்)

ஸ்ரீலங்கா அரசின் முப்படைகளின் தாக்குதல்களினால் மன்னார் மாவட்டத்தில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளனர்.

மக்கள் வாழும் பகுதிகளில் விமானப்படையினர் திடீர் குண்டு வீச்சுத் தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்தி வருவதனால் பெரும்பாலான மக்கள் தமது வீடுகளைவிட்டு வெளியேறி அகதி முகாம்களில்தஞ்சம் அடைந்துள்ளனர். மன்னார் அகதி முகாம்களில் இதுவரை 19,000 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 90,000 பேர் தங்கியுள்ளனர்.

இவர்களை விட சுமார் 20,000 பேர்வரை அகதிகளாக இந்தியாவிற்குச் சென்றுள்ளனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் இந்தியாவிற்குச் சென்றுகொண்டிருந்த அகதிகளின் படகுகளை ஸ்ரீலங்கா கடற்படையினர் பீரங்கித்

(4ஆம் பக்கம் பார்க்க)

இலங்கை பாராளுமன்ற குழு

## பாரதீய ஜனதா கட்சி பாராளுமன்ற உறு. சந்திப்பு

(டில்லி)

தற்பொழுது டில்லி சென்றுள்ள பாராளுமன்ற சபாநாயகர் ஜனாப் எம் எச். மொகமட் தலைமையிலான ஒன்பது பேர் அடங்கிய இலங்கைப் பாராளுமன்றக் குழு நேற்று இந்திய பாரதீய ஜனதாதள் பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துள்ளது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுறவுச் இம்மாதமும்

கடந்த மாதம் சம்பளமாக காசோலையைப் பெற்ற அரசாங்க ஊழியர்கள் வங்கியில் பணப்புழக்கம் இல்லாத இவ்வேளையில் தமக்கு கை கொடுத்து உதவிய கூட்டுறவுச் சங்கங்கள் இந்த மாத சம்பளத்துக்கும் தமது வயிற்றில் பால் வார்க்குமா என்று எண்ணி ஏங்குகிறார்கள்.

யாழ் மாவட்டத்தில் உள்ள பல லட்சக்கணக்கான அரச ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கடந்த மாதம் வழங்கப்பட்ட ஆயிரம் ரூபா சம்பளத்தையேனும் அவர்களுக்கு காசாக்கிக் கொடுத்த பெருமை வடபகுதி மக்களின் கற்பகதருவாக விளங்கும் கூட்டுறவு இயக்கத்தையே சாரும்

மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ள கூட்டுறவு இயக்கம் தென்னி

## சங்கங்கள் உதவுமா?

லங்கையிலிருந்து வடபகுதி வங்கிகளுக்கு பணம் அனுப்பப்படாதிருக்கும்தற்போதய இக்கட்டானசூழ்நிலையில்மேலும் ஒருபடி முன்னேறி அரசாங்க ஊழியர்களின்சம்பளக் காசோலையைபணமாகமாற்ற உதவியுள்ளது

### பாதுகாப்பு நிதிக்கு பாதுகாப்பில்லை!

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பகுதி யுத்தத்தைத் தொடர்ந்து தெற்கில் அரசு மேற்கொண்டுவரும் தேசிய பாதுகாப்பு நிதி சேகரிப்பில் மோசடிகள் நடைபெறுவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

(4ஆம் பக்கம் பார்க்க)

# "மண்ணினை மீட்க ஒன்றிணைவோம்"

''மண்ணினை மீட்க ஒன்றிணைவோம்'' என்னும் தலைப்பில் விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணியினர் வெளியிட்டுள்ள அறிக்கையின் முழு விபரமும் கீழே தரப்படுகின்றது

அடிமை வாழ்வுக்கு இதனோடு விடிவு கண்டே ஆக வேண்டும் என்ற முற்று முழுதுமான முடிவுக்கு வந்துவிட்ட அனைத்து தமிழ்பேசும் மக்களுக்கும், தமிழினத்தை பூண்டோடு அழிப்பதையே முக்கியமானநோக்கமாகக்கொண்டு பல வழிகளிலும் தன் அழிப்பு நடவடிக்கைகளை விஸ்தரித்துக் கொண்டு வரும் ஸ்ரீலங்கா இனவாத அரசுக்குமிடையே தீவிர யுத்தம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

ஆகாயம், தரை, கடல் மார்க்கமாக பல்வகை தாக்குதல்களையும் நடத்தி எம்மக்களை கொன்றொழித்து விடுவது என இனவாத அரசு தீர்மானித்து விட்டது. படைபலம் பெருக்க அரசு விடுத்த அழைப்பை ஏற்று சிங்களச் சிறுவர்கள் உட்படஎண்ணிலா இளைஞர்கள் இராணுவத்தில் சேர்கிறார்கள் பணபலத்தை அதிகரிப்பதற்காக அரசு ஆரம்பித்த தேசிய பாதுகாப்பு நிதிக்கு தொகை தொகையாக சிங்கள மக்கள் பணம் வழங்கிக் கொண்டே இருக்கிறார்கள். சிங்களப்படைகளின் செலவுக்காக மேலதிகமாக 500 கோடி ரூபாவை ஒதுக்கவும் ஸ்ரீலங்கா நாடாளுமன்றம் தீர்மானித்துள்ளது. இத்தருணத்தில் எதிரி நுழைய சிறிதும் இடம் கொடுக்காமல் தமிழ் பேசும் மக்களின் கரங்கள் ஒன்றுக்கொன்று இறுக பிணைக்கப்படட்டும். தமிழ் பேசும் மக்களின் ஆதரவுடன் உறுதியும் உரமும் கொண்டு போரிடும் எமது போராளிகளின் வீரத்திற்கும் தியாகத்திற்கும் ஈடுகொடுக்க முடியாமல் ஸ்ரீலங்கா அரசு நிலை தடுமாறிக்கொண்டிருக்கிறது.

அரசு தான் அடையப் போகின்ற ஜீரணித்துக் கொள்ள முடியாத பலவீனமான நிலையில் தமிழ்பேசும் மக்களுக்கெதிராக மும்முனைத்தாக்குதலில் முழுமூச்சாக ஈடுபடப்போகின்றது. இந்நிலையில் எம்மை மேலும் வலுப்படுத்திக்கொள்ள நிதி அத்தியாவசியமாகின்றது. அதனால்தான் நாட்டை மீட்கும் கடமையை நன்குணர்ந்து கொண்ட உங்களிடம் பவுண் கேட்டு வருகின்றோம்

மீளச்செலுத்தும் கடன் திட்டத்தின் அடிப்படையில் ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் குறைந்தது இரண்டு பவுண் தங்கமாவது தரப்பட வேண்டுமென்று எதிர்பார்க்கின்றோம்.

நாளும் போரில் போராளிகள் மரணத்தை மகிழ்வுடன் அணைத்துக் கொண்டிருக்கிறார்கள். தொடர்ந்து வருபவர்கள் எதிரிக்குச் சவாலாக அமைவார்கள் என்ற நம்பிக்கையுடன்தான் ஒவ்வொரு போராளியும் மரணத்தை தழுவுகின்றான் எதிரியின் கால்த்தடம் எம்மண்ணில் பதியவிடக்கூடாது என்பதில் ஒவ்வொரு மக்களும் உறுதியாக நின்று செயற்படுவார்கள் என்ற நம்பிக்கையுடன் தான் அவனின் இறுதி மூச்சு நிற்கின்றது.

தொழிலாளி, முதலாளி, ஏழை, பணக்காரன், முதியோர் சிறுவர் அனைவருமே தமது அதிஉச்ச பங்களிப்பை மனப்பூர்வமாக வழங்க முன்வருவதன் மூலமே இந்த நாட்டின் விடிவு நிச்சயிக்கப்படும். போராட்டம் வலுப்பெறும் போது தாக்குதலால் உண்டாகும் இழப்புக்கள் மட்டுமல்ல, பட்டினிச்சாவுகள் கூட நிகழலாம். இவற்றையெல்லாம் எதிர் கொண்டு முன்னேற வேண்டுமானால் எமது படையின் அளவும் அதிகரிக்கப்பட வேண்டும். பணபலமும் எமக்கு வேண்டும்.

தாய்மாரே!

உங்கள் பிள்ளைகளை மனப்பூர்வமாக போராட அனுப்புவதன் மூலம் உயிரைக் கொடுத்தும் எதிரியை உள்ளே நுழையவிடாமல் தடுக்க போராடிக் கொண்டிருக்கும் பிள்ளைகளுக்கு உற்சாகத்தை கொடுங்கள். போர்க்களத்தில் முதுகில் வேல்பாய்ந்து மகன் இறந்தால் அவனை அள்ளி எடுத்து 'மகனே' என்று அழமாட்டேன் என்று சூளுரைத்த வீரத்தாயின் பரம்பரையில் உதித்தவர்கள் என்பதை உலகிற்கு நிரூபித்துக் காட்டுங்கள். எதிரி எமது நிலத்தை ஆக்கிரமித்து விடலாம் என்ற எண்ணத்துடன் எம்மை அழித்துவிட முயலும் இவ்வேளையிலும் பொன்னும் மணியும் அணியத்தான் வேண்டுமா என்பதை சிந்தித்துப் பாருங்கள். உயிரற்ற உடலை அலங்கரிப்பது போன்றதுதான் சுதந்திரமற்ற பூமியில் இருந்து சிங்காரித்துக் கொள்வதும் என்பதை இன்னமும் சிலர் புரிந்து கொள்ளாமல் இருப்பது வேதனைக்குரிய விடயமாகும். மரணங்களுக்குள் அனைவரும் வாழ்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையிலுமா பொன் நகைகளை கழற்றி தமிழீழ மீட்பு நிதிக்கு வழங்கலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள். இனியும் மௌனமாக இருப்பதற்குரிய நேரமல்ல இது.

தமிழ் பேசும் மக்களை அழித்தொழித்து விட்டால் அவர்களின் சுதந்திரஉணர்வும் நசுக்கப்பட்டு விடும் என்று பகற்கனவு கண்டு கொண்டிருக்கும் எதிரியை ஓட ஓட விரட்ட எல்லோரும் ஒன்றிணைந்து செயற்பட முன்வாருங்கள்.

## அனைத்து மக்களின் பங்களிப்பு அவசியம்

(தெல்லிப்பளை)

இன்றைய நிலைமையில் அனைத்துத் தரப்பினரும் எம்முடன் இணைந்து தமது பங்களிப்பினை வழங்க முன்வர வேண்டும். பதினைந்துவயது முதல் ஐம்பது வயது வரையானவர்கள் எமது வேலைத் திட்டங்களில் பங்களிப்பினை கட்டாயம் வழங்க வேண்டும். இவர்களை இப்பணிகளில் இணைக்கக்கிராமிய மட்டத்தில் உள்ள பொது நிறுவனங்கள் முன்வரவேண்டும். பொது நிறுவனங்கள் வெறுமனே பெயரளவில் இல்லாமல் இன்றைய சூழ்நிலையில் சமூக நலன் கருதிப்பங்களிக்கவேண்டும்.

இவ்வாறு புன்னாலைக்கட்டுவன் பிரதேசப் பொறுப்பாளர் கதிரவன் புன்னாலைக் கட்டுவன், குப்பிளான், குரும்பசிட்டி, வசாவிளான் பகுதிச் சனசமூக நிலையங்கள், சபைகள், ஆலயபரிபாலன சபைகள், கூட்டுறவு சங்ககிளைக் குழு உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார். மேலும் அவர் தனதுஉரையில் இப்பகுதியிலுள்ளபொதுச் சேவைநிறுவனங்கள்பொதுமக்கள் கூடும்இடங்களில் பதுங்கு குழிகளை அமைத்தல், காயமடைந்தவர்களுக்கு முதலுதவிச் சிகிச்சைகளை வழங்க ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைத்தல், தரிசு நிலங்களிலும் ஏனைய விவசாய நிலையங்களிலும் நெருக்கடி நிலைமைக்கு தகுந்த பயிர்களை பயிரிடுதல் போன்றனவற்றில் எமது உதவியுடன் முன்னுதாரணமாகச் செயற்பட வேண்டும் என்றார். (26)

## இல. தமிழ் அகதிகளுக்கு ரூ. 10 கோடி செயற்திட்டம்

(சென்னை)

தற்பொழுது தமிழகம் வந்தடைந்துள்ள இலங்கை தமிழ் அகதிகளுக்கான பராமரிப்பு வேலைகளை மேற்கொள்ளும் வகையில் பத்துக் கோடி ரூபாய்க்கான உத்தேச செயல் திட்டமொன்று தமிழக அரசினால் மத்திய அரசுக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

இராமேஸ்வரத்தில் இந்த உத்தேச செயற்திட்டம் பற்றி செய்தியாளர்கள் மத்தியில் கருத்து தெரிவித்த அகதிகள் புனர்வாழ்வுத்துறை அதிகாரி திரு. ராமதாஸ் அடுத்த ஆறு மாத காலத்தில் சுமார் ஐம்பதாயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழகம் வருவார்களென்று எதிர்பார்க்கப்படுவதால், அவர்களுக்கான வசதி ஏற்பாட்டுகளை மேற்கொள்ளும் வகையிலேயே பத்துக் கோடி ரூபாய்க்கான இந்த உத்தேச திட்டத்தினை மத்திய அரசுக்கு கையளித்துள்ளதாகவும் தெரிவித்தார்,

இலங்கைத் தமிழ் அகதிகளின் இலங்கை நாணயத்தை மாற்றிக்கொள்ளும் வகையில் இராமேஸ்வரத்தில் இரண்டு கிளை வங்கிகள் அமைக்கப் படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

## தொழில் அலுவலக இடமாற்றம்

(பருத்தித்துறை)

யாழ். மாவட்ட தொழிற் திணைக்களம் தற்காலிகமாக கோப்பாயில் இயங்கிவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு மாற்றப் பட்டுள்ள யாழ். மாவட்ட தொழிற் திணைக்களம் கோப்பாய் வடக்கில் உபதபாற் கந்தோருக்கு அருகாமையில் (மானிப்பாய் வீதி,) ''இரத்தினவில்லா'' கட்டிடத்தில் இயங்கிவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது (15)

## குடிநீர் தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையால் தற்சமயம் கொழும்புத்துறை மகாவித்தியாலயம், கொழும்புத்துறை சூசையப்பர் ம.வி. பாண்டியன்தாழ்வு சந்தான மாதா கோவில், சென்பற்றிக்ஸ் கல்லூரி, பாஷையூர் ம.வி. ஆகிய அகதி முகாங்களுக்குத் வேவையான குடிநீர் மிகவும் கட்டுப்பாடான முறையில், எரிபொருள் தட்டுப்பாடான நிலையிலும் திருப்திகரமாக வழங்கப்பட்டு வருகிறது என்று யாழ். மாநகர சபை ஆணையாளர் வி. பி. பாலசிங்கம் பத்திரிகைச் செய்திக் குறிப்பொன்றில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மேற்படி அகதி முகாம்கள் தவிர்ந்த, மாநகர சபை நிர்வாக எல்லைக்குள் வேறு இடங்களில் அமைந்துள்ள அகதி முகாம்களுக்கு குடிநீர்வசதி தேவைப்படின், யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் இயங்கிவரும் கரும பீடத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என்று அக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## முத்திரைச் சந்தைப் பகுதி "மினி" நகரமாகிறது

(யாழ்ப்பாணம்)

முத்திரைச்சந்தைப் பகுதி கோட்டை ஷெல்தாக்குதலின் பின் ஓர் மினி நகரமாக உதயமாகி வருவதை அவதானிக்கக் கூடியதாகஉள்ளது. மினிபஸ் நிலையமும் சிறிய கடைத் தொகுதிகளும் அங்கு உதயமாகி வருவதையும் அவதானிக்கலாம்.

கோட்டை முகாமிலிருந்து ஷெல் தாக்குதல் நடைபெற்றதைத் தொடர்ந்து மத்திய நகரப் பகுதியிலிருந்த கடைகள் யாவும் நல்லூர்ப் பகுதிக்கும் அங்கு நடைபெற்ற ஹெலித் தாக்குதலைத் தொடர்ந்து முத்திரைச்சந்தைப் பகுதிக்கு மாற்றப் பட்டுள்ளது.

தற்போது மிகத் துரிதமாக தன்னிச்சையாக முன்னேறி வரும் முத்திரைச்சந்தைப் பகுதியை ஒழுங்குபடுத்துவதற்கு இன்று மாநகரசபை அதிகாரிகள் அப் பகுதிக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இக்குழு கடைகள் அமைப்பதற்கு இடம் ஒழுங்கு செய்தல், வீதிப் போக்குவரத்தைப் பாதிக்காத வகையில் மினிபஸ்

## கொழும்புத் தபால்கள்

# இன்று வரலாம்; நாளை விநியோகிக்கப்படலாம்?

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில்இதுவரை தேங்கியிருந்த கொழும்புக்கான தபால்பொதிகள் நாற்பத்திநான்கும் நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளதாக மாகாண தபால் அத்தியட்சகர் என். எம். சேதுகாவலர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை அங்கிருந்தும் தபால் பொதிகள் அதே வழியில் யாழ்ப்பாணம் வருகின்றது என்றும் இப் பொதிகள் இன்று வந்து சேருமென்றும் இவை பின்னர் நாளை எல்லா இடங்களுக்கும் விநியோகிக்கப்படும் என்றும் அத்தியட்

## வெளிச்சம் கொடுக்க ரூபா 50

## பயிலுநர் ஆசிரியர் கூட்டம்

(பருத்தித்துறை)

கிழக்கு மாகாணம் உட்பட மற்றும் யாழ். மாவட்டத்துக்கு வெளியிலிருந்து இடம் பெயர்ந்து வந்து தற்போது யாழ். மாவட்டத்துக்குள் தங்கியிருக்கும் பயிலுநர் ஆசிரியர்கள் அனைவரையும் எதிர் வரும் 22 ஆம்திகதி ஞாயிறு காலை 11. 00 மணியளவில் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்துக்கு

## பருத்தித்துறை ஆஸ்பத்திரி

# வைத்திய அதிகாரி இடமாற்றம் ரத்துச் செய்ய கோரிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரியின் திடீர் இடமாற்றத்தை இரத்துச் செய்யுமாறு வைத்தியசாலையின் அபிவிருத்திச்சபை சுகாதார சேவைகள், மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகாஹேரத்தை அவசரமாகக் கேட்டுள்ளது.

...ருத்திச்சபையின் தூதுகோஷ்டி தங்களை அமைச்சில் நேரிற் சந்தித்து கலந்துரையாடியது.

அப்போது பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் டாக்டர்கள் பற்றாக்குறையால் நோயாளர்கள் அனுபவிக்கும் இன்னல்களைத் தங்களுக்கு நன்கு விளக்கி கூறியதையும் தாங்கள் மறந்திருக்க மாட்டீர்கள்.

அனுப்பாதிருந்ததும் இப்பகுதி மக்களுக்குச் செய்யும் பெருந் துரோகமாகும். (15)

## மடுவில் அகதிகள் அதிகரிப்பு

(மன்னார்)

மடுக்கோவிலில் பெரும்பாலான அகதிகள் தங்கியுள்

# இன்று வரலாம்; நாளை விநியோகிக்கப்படலாம்?

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில்இதுவரை தேங்கியிருந்த கொழும்புக்கான தபால் பொதிகள் நாற்பத்திநான்கும் நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளதாக மாகாண தபால் அத்தியட்சகர் என். எம். சேதுகாவலர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை அங்கிருந்தும் தபால் பொதிகள் அதே வழியில் யாழ்ப்பாணம் வருகின்றது என்றும் இப் பொதிகள் இன்று வந்து சேருமென்றும் இவை பின்னர் நாளை எல்லா இடங்களுக்கும் விநியோகிக்கப்படும் என்றும் அத்தியட்சகர் கூறினார்.

ஆனால் யாழ். நகரப் பகுதியில் பாதிப்படைந்த பெரிய கடை, கொட்டடி போன்ற இடங்களுக்கான கடிதங்களை பிரதம தபால் கந்தோர்களில் காலையில் வந்து பெற்றுக் கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டு மக்கள் கொழும்புக்கான கடிதங்களை உள்ளூர் தபால் பெட்டிகளில் போடுமாறும் அவை சேகரிக்கப்பட்டு லொறி மூலம் அனுப்பிவைக்கப்படும் என்றும் வெளிநாட்டுத் தபால்களை தபால் அலுவலகங்களில் ஒப்படைக்கலாம் என்றும், செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்திற்கு சென்று அலையத் தேவையில்லை என்றும் அவர் சொன்னார்.

வசாவிளான் தபாற்கந்தோர் பாதுகாப்புக் கருதி அச்சுவேலிக்கு இடமாற்றப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## வெளிச்சம் கொடுக்க ரூபா 50

(காங்கேசன்துறை)

ஷெல் தாக்குதலினாலும், குண்டு வீச்சினாலும் தையிட்டிக் கிராமத்துக்கு வழங்கப்பட்ட மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இதேவேளை அயற் கிராமத்து மின்சாரமும் துண்டிக்கப்பட்டது. கிராம மக்கள் இது குறித்து மின்சார அத்தியட்சகரிடம் முறையிட்டும், அவர் தனக்குப் பாதுகாப்பு வழங்கினால் மின்சாரம் மீளவும் வழங்குவதாகக் கூறியுள்ளாராம். ஆனால் இப்போது தையிட்டிக் கிராமத்துக்கு மின்சாரம் மீண்டும் வந்துவிட்டது. மின்சார அத்தியட்சகர் தையிட்டி வாசி என்பதாலும், அங்கு வாழும் மக்களிடம் தலா ரூபா ஐம்பது வாங்கியதாலும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதாம். ஆனால் மின்சாரம் துண்டிக்கப்பட்ட அயற்கிராமத்துக்கு இதுவரை மின்சாரம் கிடைக்கவில்லை.

---

றதைத் தொடர்ந்து மத்திய நகரப் பகுதியிலிருந்த கடைகள் யாவும் நல்லூர்ப் பகுதிக்கும் அங்கு நடைபெற்ற ஹெலித் தாக்குதலைத் தொடர்ந்து முத்திரைச்சந்தைப் பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

தற்போது மிகத் துரிதமாக தன்னிச்சையாக முன்னேறி வரும் முத்திரைச்சந்தைப் பகுதியை ஒழுங்குபடுத்துவதற்கு இன்று மாநகரசபை அதிகாரிகள் அப் பகுதிக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இக்குழு கடைகள் அமைப்பதற்கு இடம் ஒழுங்கு செய்தல், வீதிப் போக்குவரத்தைப் பாதிக்காத வகையில் மினிபஸ்களை நிறுத்த இடம் ஒதுக்குதல், ஓட்டோக்களை நிறுத்த இடம் ஒதுக்குதல் என்பனவற்றை தீர்மானிக்க உள்ளது என இவ்விடயம் பற்றி தெரிவித்த மாநகரசபை ஆணையாளர் வி. பி. பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் ஏற்கனவே இப் பகுதியில் போர் நடவடிக்கைகளால் வரும் காயமடைந்தோருக்கு சிகிச்சை அளிக்கவும் புதிதாக தோன்றி இருக்கும் மினி நகரத்தை கட்டுப்படுத்தவும் சென் ஜோன்ஸ்அம்புலன்ஸ் சேவைப் பிரிவினரைஅப்பகுதியில் முகாம்அமைக்க தாம் அனுமதி வழங்கியுள்ளதாகவும் அவர் கூறினார். (லோ)

---

விக்கப் பட்டுள்ளது.

## பயிலுநர் ஆசிரியர் கூட்டம்

(பருத்தித்துறை)

கிழக்கு மாகாணம் உட்பட மற்றும் யாழ். மாவட்டத்துக்கு வெளியிலிருந்து இடம் பெயர்ந்து வந்து தற்போது யாழ். மாவட்டத்துக்குள் தங்கியிருக்கும் பயிலுநர் ஆசிரியர்கள் அனைவரையும் எதிர் வரும் 22 ஆம்திகதி ஞாயிறு காலை 11.00 மணியளவில் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்துக்கு வருகை தருமாறு வடமராட்சி பயிலுநர் ஆசிரியர் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார்(15)

## விசேட பொதுக்கூட்டம்

(பருத்தித்துறை)

வடமராட்சிக் கோட்டக் கல்வி அலுவலகப் பகுதியைச் சேர்ந்த பயிலுநர் ஆசிரியர் சங்க விசேட பொதுக் கூட்டமொன்று 22 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் நடைபெறுமென சங்கப் பொதுச் செயலாளர் திரு. க. ஸ்ரீசந்திரன் அறிவித்துள்ளார். (15)

# வைத்திய அதிகாரி இடமாற்றம் ரத்துச் செய்ய கோரிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரியின் திடீர் இடமாற்றத்தை இரத்துச் செய்யுமாறு வைத்தியசாலையின் அபிவிருத்திச்சபை சுகாதார சேவைகள், மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகாஹெரத்தை அவசரமாகக் கேட்டுள்ளது.

இந்த அவசரகோரிக்கையையடுத்து அபிவிருத்திச் சபையால் அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையின் டாக்டர்கள், ஊழியர்கள் பற்றாக்குறைகள் பற்றியும்,வைத்தியசாலையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றியும் இவ் வைத்தியசாலையின் அபிவிருத்திச்சபையின் தூதுகோஷ்டி தங்களை அமைச்சில் நேரிற் சந்தித்து கலந்துரையாடியது.

அப்போது பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் டாக்டர்கள் பற்றாக்குறையால் நோயாளர்கள் அனுபவிக்கும் இன்னல்களைத் தங்களுக்கு நன்கு விளக்கி கூறியதையும் தாங்கள் மறந்திருக்க மாட்டீர்கள்.

இந்நிலையிலே இவ் வைத்தியசாலையில் மாவட்ட வைத்திய அதிகாரிக்கான கடமைகளையும், சுகாதார வைத்திய அதிகாரிக்கான கடமைகளையும், நிர்வாக நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வரும் மாவட்ட வைத்திய அதிகாரியைத் திடீரென மாற்றியுள்ளதும், அவருக்குப் பதிலாக எவரையும் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைக்கு அனுப்பாதிருந்ததும் இப்பகுதி மக்களுக்குச் செய்யும் பெருந் துரோகமாகும். (15)

## மடுவில் அகதிகள் அதிகரிப்பு

(மன்னார்)

மடுக்கோவிலில் பெரும்பாலான அகதிகள் தங்கியுள்ளனர். இவர்கள் இந்தியாவுக்குப் போவதற்காகக் காத்திருக்கின்றனர். அநேகமானோர் திருக்கோணமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களே.

இதே போல கொழும்பு போகமுடியாத வட பகுதியைச் சேர்ந்தவர்கள் சிலரும் இங்கு தங்கியுள்ளனர்.

கிழக்குப்பகுதிகளில் இருந்து கால்நடையாக பலர் இங்கு வந்து கொண்டிருக்கின்றனர்

# பாதிக்கப்பட்ட மீனவருக்கு நிவாரண உதவி வேண்டும்

(பருத்தித்துறை)

ஸ்ரீலங்கா கடற்படையினரின் அடாவடித்தனங்களால் தொழில் செய்ய முடியாதுள்ள வடமராட்சிப் பகுதி மீனவர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பருத்தித்துறைமுனை கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பு பருத்தித்துறை உதவி அரசாங்க அதிப[illegible] திரு. வை. வேலும் மயிலும் அவர்களைக் கேட்டுள்ளது.

[illegible]டமராட்சிப் பகுதியின் கரையோர மீனவகுடும்பங்களின் அன்றாட மீன் பிடித் தொழில்கள் ஸ்ரீலங்கா கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகளினால் பாதிப்படைந்துள்ளது. இதனால் இம் மீனவ குடும்பங்கள் உணவுக்கே பெரும் கஸ்டங்களை அனுபவித்து வருகின்றார்கள்.

வடமராட்சிக் கரையோரங்களில் ஸ்ரீலங்கா கடற்படையினர் கரையோர மீனவர்களின் குடியிருப்புக்களையும், மீன் பிடிப் படகுகளையும் அடிக்கடி சேதப்படுத்திவருவதுடன் மீனவர்களைத் துன்புறுத்தியும் மீனவர்களைக் கடலுக்கு வரக் கூடாது என எச்சரித்தும் உள்ளனர்.

எனவே இன்னல்களை அனுபவித்து வரும் இம்மீனவர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (15)

## தீவுப்பகுதிமக்கள் பெரும் அவதி

(நயினாதீவு)

அனலைதீவு, எழுவைதீவுப் பகுதி மக்கள் போக்குவரத்து வசதிகள் இன்றியும், உணவுப் பொருட்கள் இன்றியும் மிகவும் கஷ்டப்படுகின்றனர்.

கடற்படை ரோந்துப்படகுகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் இங்கு நடைபெற்ற படகுச் சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.


## வைற் ஹவுஸ்

### அந்திய கால சேவை

119, பிரதான வீதி, யாழ்ப்பாணம்

எமது ஸ்தாபனம் எந்நேரமும் திறந்திருக்கும் இங்கு வரமுடியாத பட்சத்தில் கீழே குறிப்பிட்ட விலாசத்தில் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

வைற் ஹவுஸ்
(அந்திய கால சேவை)
ஆடியபாதம் வீதி,
சந்தைக்கு அருகாமையில்
கொக்குவில் மேற்கு, கொக்குவில்

(B/1255)


## ஓராண்டு நினைவஞ்சலி



கப்டன் அறிவு
(விக்னேஸ்வரன்)
ஒட்டங்குளம்

வீரமரணம் 13-7-89

மேஜர் விசு
(இ.அரவிந்தராம்)
நெல்லியடி

2 வது லெப்டினன்
பீற்றர்
(அலோசியஸ்) கிளிநொச்சி

காலம் காட்டிய கடமையை
செவ்வனே செய்த இவர்களை
வரலாறு வாரியணைத்து
வாழவைத்திருக்கின்றது
இவர்களின் வீரமரணங்கள்
விடுதலைப்போரின் முக்கிய படிக்கற்கள்

- நண்பர்கள்

(B/1271)

### சிந்தனைக்கு

அநீதிக்கு விரைந்து செயலாற்றும் தொண்டன் சூது.

- எட்மண்ட் பர்க்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 19-07-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

# சூடுகண்ட பூனை அடுப்படியை நாடக்கூடாது

"சூடு கண்ட பூனை அடுப்படியை நாடாது" என்று தமிழில் ஒரு பழமொழி. சில பூனைகள் சூடு பட்டதை மறந்து மீண்டும் அடுப்படியை நாடுவதுண்டு இவை ரோஷம் கெட்ட பூனைகள்.

மனிதரிலும் இப்படி இருக்கிறார்கள். ஆயுதம் ஏந்திய தமிழ் இளைஞர்களான வீரவேங்கைகளுடன் போர் புரிந்து சிங்களப்படைகளால் வெல்ல முடியாது என்பது மட்டுமல்ல சிங்கள இளைஞர்கள் அழிந்து போய்விடுவார்கள் என்ற அச்சத்தினாலும்கவலையினாலும் இந்திய இராணுவத்தை அமைதிப்படை என்ற பெயரில் வரவழைத்தார் முன்னாள் சிறிலங்கா ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா.

போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், பிரிட்டிஷார் போல இந்திய இராணுவமும் இங்கு நூற்றைம்பது வருடங்கள் தங்கிவிடுமோ என்று ஜெயவர்த்தனாவுக்குப் பின்வந்த சிறிலங்கா ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா கருதினார்.

இந்திய இராணுவத்தை எதிர்த்து விடுதலைப்புலிகள் போர் புரிந்துகொண்டிருந்ததனால் இந்தியப் படைகளைத் திருப்பி அழைத்துக்கொள்ளுமாறு தாம் வற்புறுத்தினால் நிச்சயம் அது வெற்றியளிக்கும் என்ற நம்பிக்கையுடன் இந்தியப் படையைத் திருப்பி அழைக்கும்படி வலியுறுத்தினார்.

முயற்சிபலித்தது இந்தியப்படையை டில்லியில் ஆட்சிக்கு வந்த புதிய வி. பி. சிங் அரசு திருப்பி அழைத்துக் கொண்டது.

வடக்கிலும் கிழக்கிலும் இந்தியப்படை வெளியேறியதும் அந்த இடத்தை சிறிலங்கா அரச படைகள் கைப்பற்ற வேண்டுமென்று சிறிலங்கா அரசு திட்டமிட்டுச் செயல்பட்டது.

இந்தியப் படையையே எதிர்த்துப் போரிட்ட விடுதலைப் புலிகள் தமிழ் மண்ணில் சிங்களப்படைகள் இருக்கவேண்டிய அவசியமில்லை என்று கூறியது.

சிறிலங்கா சிங்களப்படையும் தமிழ் மண்ணுக்கு இந்தியப்படை போன்று ஓர் அந்நியப்படையே. தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி அடிமைகளாக்குவதற்கே சிங்களப்படை தமிழ் மண்ணில் குவிக்கப்பட்டது.

தமிழ் மக்களை அடிமைப்படுத்துவது மட்டுமல்ல தமிழினத்தையே அழிப்பதுதான் சிறிலங்கா சிங்களப் படையின் நோக்கம் என்பது தெளிவாகிவிட்டது.

இன அழிப்பைத் தடுத்து தமிழ் மண்ணைக்காத்து தமிழ் மக்கள் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் கௌரவமாகவும் சுயநிர்ணய உரிமையுடனும் வாழ்வதற்கு சிறிலங்கா சிங்கள அரச படைகளை எதிர்த்துப் போர்

# போர்க்காலச் சிந்தனைகள்

## போரும் மனோநிலையும் —— 5

நீங்கள் எல்லாப் போர்களிலும் முதலில் தோற்றுப் போகிறீர்கள் கடைசிப் போரிலும் தோற்றுப்போனால் என்ன செய்வீர்கள்?

இது ஆங்கிலேயன் ஒருவனிடம் கேட்கப்பட்ட கேள்வி.

அப்படியானால் அதுகடைசிப் போராக இருக்கமாட்டாது.

இது அந்த ஆங்கிலேயனின் பதில்.

இத்தகைய மனோதிடம் இருந்ததால் தான் ஆங்கிலேயர்களால் சகல போர்களிலும் வெற்றிவாகை சூடக் கூடியதாகவிருந்தது.

மக்கள் மாத்திரமன்றி அவர்களை வழி நடத்திய தலைவர்களும் மனோதிடம் உள்ளவர்களாகவே இருந்தார்கள்.

ஸ்பானிய பிலிப்பையோ, பிரஞ்சிய நெப்போலியனையோ, ஜேர்மானியஹிட்லரையோ கண்டு ஆங்கிலேய தலைவர்கள் கதி கலங்கிப் போய்விடவில்லை.

''கோழிக்குஞ்சின் கழுத்தைத்திருகுதல் போன்று இன்னும் சில வாரங்களில் இங்கிலாந்து திருகப்படும்'' என்று ஹிட்லர் கூறியதை அறிந்த வின்ஸ்ரன் சேர்ச்சில் அளித்த விளக்கம் உலகப்பிரசித்தமானதாகும்.

''சில கோழிக்குஞ்சுகள்; சில கழுத்துகள் (Some Chicken, Some necks)

ஐம்பத்தேழு நாட்களாக தொடர்ந்து லண்டன்மீது ஜேர்மனியர்குண்டு மாரி பொழிந்த போதும் லண்டன் மக்கள் தமது மனோநிலையை தளரவிடவில்லை.

''இங்கிலாந்து என்று ஒரு நாடு என்றும் நிலை பெற்றிருக்கும்'' என்று பாடிக் கொண்டு மக்கள் போர்ப் பணிகளில் ஈடுபட்டார்கள்.

எதிரியின் அழிப்பு வேலைகளை கண்ட மக்கள் தலைவர்களைத் திட்டவில்லை; விமர்சிக்கவில்லை; அயர்ந்து போய் விடவில்லை.

தலைவர்கள் பத்திரமாக இருக்கிறார்கள், எமது பிள்ளைகள் போர்க்களத்தில் மடிகிறார்கள். என ஒப்பாரி வைக்கவில்லை.

போர்ப் பணிகளில் ஈடுபட வேண்டாம் எனத் தாய்மார் பிள்ளைகளைத் தடுக்கவில்லை.

எனது மகன் போராட்டத்தில் ஈடுபடக் கூடாது,ஆனால் மற்றப் பிள்ளைகள் போர் வீரர்களாகி நாட்டைக்காக்க வேண்டும் என எந்தத் தகப்பனும் நினைக்கவில்லை.

இருப்பதோ ஒரேயொரு பிள்ளை. அவன் போராட்டத்தில் ஈடுபட்டு இறந்து போனால் எனக்கு கொள்ளி வைப்பது யார் என எந்தத் தகப்பனும் கேட்கவில்லை.

எமது நாட்டை, எமது இனத்தை, எமது மானத்தை, எமது சுதந்திரத்தை பாதுகாப்பதற்கு நாம் எல்லாரும் சேர்ந்து போராட வேண்டும் என நினைந்து போரிட்டதனாலேயே அவர்களால் நாஜிகளை வெல்ல முடிந்தது.

மக்களின் மனோ நிலையை நன்குணர்ந்த் தலைவர் சேர்ச்சிலும்

''எதிரி எங்கேயும் தலை தூக்கி விடக் கூடாது. கதி நடுவே அவர்களை கதிகலங்கச் செய்வோம். விண்ணில் அவர்களுக்கு நம் வீரம் காட்டுவோம். பள்ள தாக்குகளில், நீண்டகன்ற தெருக்களில், குறுகலான சந்துகளில், வீடுகளில் எங்கே நம் எதிரி எதிர்ப் பட்டாலும் சரி அங்கங்கே போர் புரிவோம். அவர்களுக்கு நம் வலிமையை உணர்த்துவோம்''

என கூறி அவர்களை உற்சாகப்படுத்தினார்.

இங்கிலாந்து மக்கள் எதிர்கொண்டது ஆக்கிரமிப்புப் போர்; நாம் எதிர்கொண்டிருப்பதுஅடக்குமுறைப்போர்.

இப்போரில் நாம் தோற்றுப் போவோமேயானால் எமது சுதந்திரத்தை இழந்தவர்களாவோம். சுதந்திரமென்பது கடைச்சரக்கல்ல.

அக்கா அக்கா என்று நீ
அழைத்தாய்
அக்கா வந்து கொடுக்கச்
சுக்கா மிளகா சுதந்திரம்

என கூட்டுக்கிளியை பாரதிதாசன் கேட்டதை உய்த்துணர்ந்து பாருங்கள்.

சுதந்திரம் எமது பிறப்புரிமை; அது எமக்கு மறுக்கப்படும் போது அதற்காகப் போராடுவது எமது தலையாய கடமை.

சுதந்திரமில்லாத வாழ்வும் ஒரு வாழ்வா?

''தேவிநின்னொளிபெறாத
தேயமோர்தேயமாமோ?
ஆவியங்குண்டோ?செம்மை
அறிவுண்டோ? ஆக்க
முண்டோ
காவிய நூல்கள் ஞானக்
கலைகள் வேதங்களுண்
டோ
பாவியரன்றோ நின்தன்
பாலனம் படைத்திலா
தார்''

என சுதந்திரத்தின் மகிமை பற்றி பாரதி கூறியிருப்பதை கவனியுங்கள்.

### இரத்தினம்

சுதந்திரமில்லாத பாவிகளாக நாம் வாழலாமா?

நாம் ஏன் இந்த நாட்டில் இரண்டாந்தரப் பிரசைகள் ஆக இருக்க வேண்டும்?

எமது மக்கள் ஏன் காலத்துக்குக்காலம் சிங்களக் குண்டர்களால் வெட்டிக் கொலை செய்யப்படவேண்டும்?

நாம் ஏன் என்றும் சலுகைகளைப் பெற்று வாழ்பவர்களாக இருக்க வேண்டும்?

தகுதி பெற்றிருந்தும் எமது பிள்ளைகள் பல்கலைக் கழகங்களில் கல்வி பயில முடியாது ஏன் தவிக்க வேண்டும்?

வேலை வாய்ப்புக்களில் நாம் ஏன் புறக்கணிக்கப்பட வேண்டும்?

சிந்தித்துப் பாருங்கள்

உலகெங்கணும் நடந்த சுதந்திரப் போராட்டங்களை நினைவு கூருங்கள்.

ஒரு வாஷிங்டன் இல்லாதிருந்தால் இன்றைய ஐக்கிய அமெரிக்கா இல்லை.

ஒரு லெனின் இல்லாதிருந்தால் இன்றைய சோவியத் ஒன்றியம் இல்லை.

ஒரு மாசேதுங் இல்லாதிருந்தால் இன்றைய செஞ்சீனா இல்லை.

ஒரு காந்தி இல்லாதிருந்தால் இன்றைய பாரதம் இல்லை.

ஒரு ஹோசிமின் இல்லாதிருந்தால் இன்றைய வியற்நாம் இல்லை.

ஒரு கஸ்ரோ இல்லாதிருந்தால் இன்றைய கியூபா இல்லை.

இந்தப் பெருந்தகைகள் எல்லாரும் போராடித்தான் சுதந்திரம் பெற்றார்கள்.

அவர்களைப் போன்று இன்றும் பலர் சுதந்திரத்துக்காகப் போராடிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

அத்தகையதோர் போராட்டத்தைத்தான் தம்பி பிரபாகரனும் இன்று நடத்திக் கொண்டிருக்கிறார்.

இப்போரில் நாமும் பங்கு பற்ற வேண்டாமா?

நாம் தொடர்ந்தும் பார்வையாளராக இருப்போமானால் எமக்காக – எமது சுதந்திரத்துக்காக - போரிடுவது யார்?

நாம் எல்லோரும்ஆயுதம் ஏந்த வேண்டும் என்பதற்கில்லை. வலிமை மிகுந்தவர்கள் - இளைஞர்கள் - நேரடியாக போரில் ஈடுபட வேண்டும். ஏனையோர் மறைமுகமாக உதவவேண்டும். இது பிரபாகரனின்போரோ புலிப்படையினரின் போரோ அல்ல; இது எமது போர்; தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள இனவாத அரசாங்கம் நடத்தும் அழிவுப்போர் என்பதை நாம் எந்தக் கணத்திலும் மறந்துவிடலாகாது.

இந்த அழிவைத் தடுத்து நிறுத்தல் எமது கடமை அல்லவா?

சிங்கள இனவாதத்தை என்றுமே தலை தூக்காதவாறு குழிதோண்டிப் புதைத்தல் எமது வேலை அல்லவா?

தமிழன் அறிவில் மாத்திரமல்ல ஆண்மையிலும் சிங்களவனைவிட மேலானவன் என்பதை காட்டுவது எமது பொறுப்பல்லவா?

எமக்காக இன்று போரில் ஈடுபட்டிருக்கும் புலிகளுக்கு அனைத்து உதவிகளையும் நாம் செய்வோம்.

இன்று நடப்பது புலிகளுக்கு எதிரான போர் அல்ல; தமிழீழ மக்களுக்கு எதிரான போர் என்பது எமக்குத் தெரியும்.

புலிகளின் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க முடியாத சிங்களப் படை பொதுமக்களை கொன்று குவிப்பது எமக்குத் தெரியும்.

ஜே. வி. பியை அடக்குவதற்காக சிங்களப் பொது மக்களை அழித்தது போன்று புலிகளை அடக்குவதற்காக தமிழ் மக்களை அழிக்க வேண்டும் என பிரேமதாசா திட்டமிட்டுச் செயற்படுவதும் எமக்குத் தெரியும்.

சொத்துக்களை அழிப்பதாலும் பொருளாதார தடைகளை ஏற்படுத்துவதாலும் தமிழ் மக்களை பணியச் செய்து விடலாம் என நினைத்து அரசாங்கம் செயற்படுவதும் எமக்குத் தெரியும்.

தமிழ்ப் பிரதேசங்களுக்கு கொலைகாரக் கும்பல்களை ''இறக்குமதி 'செய்து'' தமிழ் மக்களை அரசாங்கம் அழிப்பதும் எமக்குத் தெரியும்.

இவை எல்லாவற்றையும் தெரிந்த பின்னரும் கூட நாம் அறிவற்ற மரக்கட்டைகள் போல் இருக்கலாமா.?

தலைக்கு மேல் தண்ணீர் போனபின் முழம் போகிறதா சாண்போகிறதா என பார்ப்பது அறிவுடைமையா?

இனிமேலும் நாம் பார்வையாளர்களாக இருக்கலாமா? சிந்தியுங்கள்.

என்ன விலை கொடுத்தாயினும் நாம் இப்போரில் வெற்றிபெற்றேயாக வேண்டும்.

தமிழினத்தின் மானத்தைக் காப்பாற்ற உடனடியாக அணி திரளுவோம்.

(முற்றும்) □

# ஆப்கான்ஜனாதிபதி யோசனையை தீவிரவாதிகள் ஏற்க மறுப்பு

(இஸ்லாமாபாத்)

ஆப்கானிஸ்தான்தீவிரவாதிகளுடன் பேச்சு நடாத்த தமது அதிகாரங்கள் சிலவற்றை விட்டுக் கொடுத்து

...துள்ளனர்.

இவ்வாறு அவர் கூறியிருப்பது ஒரு பிரசார யுக்தி என்றும் தீவிரவாதிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

என தீவிரவாதிகளின் தலைவர் ஒருவர் இங்கு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி நஜிமுல்லா பல

# பரீட்சையை ஒத்திவைக்குமாறு மாணவர் ஒன்றியம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கிலும், கிழக்கிலும் இலங்கை அரசினால் தமிழ் மக்களுக்கு எதிராக யுத்தத்தை ஏவி விட்டு இன அழிப்பினை மேற்கொள்ளும் இச் சூழ்நிலையிலும் க. பொ. த (உயர் தர) பரீட்சைக்கு

மாற்றுவழியில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் கல்விப்பணிப் பாளர்கள், ஆசிரியர்சங்கங்கள், பாடசாலைஅபிவிருத்திசங்கங்கள்,அதிபர் சங்கம்,பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம், மறுமலர்ச்சிக் கழகம் ஆகிய கல்வி

வேண்டுமென்று சிறிலங்கா அரசு திட்டமிட்டுச் செயல்பட்டது.

இந்தியப் படையையே எதிர்த்துப் போரிட்ட விடுதலைப் புலிகள் தமிழ் மண்ணில் சிங்களப்படைகள் இருக்கவேண்டிய அவசியமில்லை என்று கூறியது.

சிறிலங்கா சிங்களப்படையும் தமிழ் மண்ணுக்கு இந்தியப்படை போன்று ஓர் அந்நியப்படையே. தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி அடிமைகளாக்குவதற்கே சிங்களப்படை தமிழ் மண்ணில் குவிக்கப்பட்டது.

தமிழ் மக்களை அடிமைப்படுத்துவது மட்டுமல்ல தமிழினத்தையே அழிப்பதுதான் சிறிலங்கா சிங்களப் படையின் நோக்கம் என்பது தெளிவாகிவிட்டது.

இன அழிப்பைத் தடுத்து தமிழ் மண்ணைக்காத்து தமிழ் மக்கள் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் கௌரவமாகவும் சுயநிர்ணய உரிமையுடனும் வாழ்வதற்கு சிறிலங்கா சிங்கள அரச படைகளை எதிர்த்துப் போர் புரிவதைத் தவிர வேறு வழியில்லை.

தமிழ் மக்களின் ஆதரவுடன் விடுதலைப்புலிகள் போர் புரிந்துகொண்டிருக்கிறார்கள். வீர வேங்கைகள் அரும்பெரும் தியாகங்கள் செய்துகொண்டிருக்கின்றனர்.

வீர வேங்கைகளை எதிர்த்துப் போர் புரிவதற்கு இப்பொழுது சிறி லங்கா அரசிடமுள்ள அறுபதாயிரம் பேர்கொண்ட படை போதாதென்று பட்டாளத்துக்குப் புதிதாக ஆட்களைத் திரட்டுகிறது சிறி லங்கா அரசு!

இராணுவச் செலவுக்கென ஏற்கனவே ஒதுக்கப்பட்ட நிதி போதாதென்று மேலும் கோடிக்கணக்கான ரூபாய்களை சிறி லங்கா அரசு ஒதுக்கியிருக்கிறது.

இவை போதாதென்று சிங்களப் பொது மக்களிடமிருந்து தேசியப் பாதுகாப்பு நிதியென்று தனியாக ஒரு நிதியையும் திரட்டி வருகிறது.

தமிழ் மக்களை எதிர்த்துப் போர் புரிவதற்கு தமிழ் இனத்தை அழிப்பதற்கு வெளிநாடுகளிடமிருந்து போர் விமானங்களையும், ஹெலிகொப்டர்களையும் வாங்குவதற்கு சிறி லங்கா அரசு கேள்விப் பத்திரங்கள் கோரியிருக்கிறது.

ஏற்கனவே சிறிலங்கா அரசிடமுள்ள போர் விமானங்களும். ஹெலிக்கொப்டர்களும் தமிழ் மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளில் குண்டுவீசித் தாக்குதல் நடத்துவதால் தினமும் தமிழ் மக்கள் பலர் கொல்லப்பட்டு வருகின்றனர்,

இவையெல்லாம் போதாதென்று அந்நிய நாடுகள் சிலவற்றிடமிருந்து இரகசியமாக உதவியும் பெற்று வருகிறது சிறிலங்கா அரசு.

இலங்கையில் நடைபெறுவது உள்நாட்டுப் பிரச்சினையென்றும் இதில் வெளியார் தலையிட அனுமதிக்க முடியாதென்றும் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா வெளிவெளியாகக் கூறினாலும் அவர் ''வெளியார்'' என்று யாரைக் குறிப்பிட்டிருக்கிறார் என்பது அவர் குறிப்பிட்ட அந்த ''வெளியாருக்கு'' நன்கு தெரியும்.

அதுமட்டுமல்ல பிரேமதாசாவின் சிறிலங்காசிங்கள அரசு எந்த ''அந்நிய சக்திகளிடமிருந்து'' உதவி பெறுகிறதென்பதும் பிரேமதாசா குறிப்பிட்ட அந்த ''வெளியாரு''க்குத் தெரியாமலிருக்க முடியாது.

இதனால்தான் பிரேமதாஸா, சிறிலங்கா பாராளுமன்ற சபாநாயகர் எம். எச். முகமது தலைமையில் அனுப்பிய தூதுக் குழுவுடன் சென்ற பிரேமதாஸாவின் வெளிவிவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோனிடம், இந்திய வெளிவுறவுச் செயலர் துபே, இலங்கைப் பிரச்சினையில் அந்நிய சக்திகளின் தலையீடு பற்றியும் இது தெற்காசிய பாதுகாப்புக்கே ஆபத்தாகலாம் என்றும் இந்தியாவின் எச்சரிக்கையைத் தெரிவித்திருக்கிறார்.

ஒரு இனத்தை அழிப்பதற்காக அந்நிய சக்திகளின் உதவியை நாடுவது பின்னர் தன்னையே அழித்துக் கொள்ளவே வழிவகுக்கும்.

''சூடுகண்ட பூனை அடுப்படியை நாடக்கூடாது''

வைக்கவில்லை.

போர்ப் பணிகளில் ஈடுபட வேண்டாம் எனத் தாய்மார் பிள்ளைகளைத் தடுக்க

கடைச்சரக்கல்ல.

அக்கா அக்கா என்று நீ அழைத்தாய் அக்கா வந்து கொடுக்கச்

சிந்தித்துப் பாருங்கள்.

உலகெங்கனும் நடந்த சுதந்திரப் போராட்டங்களை நினைவு கூருங்கள்.

இந்த அழிவைத் தடுத்து நிறுத்தல் எமது கடமை அல்லவா?

சிங்கள இனவாதத்தை

காப்பாற்ற உடனடியாக அணி திரளுவோம்.

(முற்றும்) □

# ஆப்கான்ஜனாதிபதி யோசனையை தீவிரவாதிகள் ஏற்க மறுப்பு

(இஸ்லாமாபாத்)

ஆப்கானிஸ்தான்தீவிரவாதிகளுடன் பேச்சு நடாத்த தமது அதிகாரங்கள் சிலவற்றை விட்டுக் கொடுத்து பகிர்ந்து கொள்ள தயார் என்று ஆப்கான் ஜனாதிபதி நஜிமுல்லா கூறியிருப்பதை தீவிரவாதிகள் ஏற்க மறுத்துள்ளனர்.

இவ்வாறு அவர் கூறியிருப்பது ஒரு பிரசார யுக்தி என்றும் தீவிரவாதிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஆப்கான் ஜனாதிபதி நஜிமுல்லா பதவியில் இருந்து முற்றாக நீக்கப்படவேண்டும் என தீவிரவாதிகளின் தலைவர் ஒருவர் இங்கு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி நஜிமூல்லா பல தடவை இவ்வாறாக கூறிவருவதாகவும் இது ஒரு ஏமாற்று நடவடிக்கை எனவும் தீவிரவாதிகள் தெரிவித்தனர்.

# தேசிய முன்னணி அரசு மீது ராஜீவ் காந்தி குற்றச்சாட்டு

(விஸாகபட்டினம்)

தேர்தல் காலத்தில் மக்களுக்கு கூறிய வாக்குறுதிகளை தேசிய முன்னணி அரசு நிறைவேற்றத்தவறிவிட்டது என முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி குற்றம் சாட்டினார்

இங்கு நடைபெற்ற இந்திரா காங்கிரஸ் கட்சி பொதுக் கூட்டம் ஒன்றில் அவர் உரையாற்றினார்.

தேசிய முன்னணி அரசின் தற்போதைய நிலைமை குறித்துகுறிப்பிட்டஅவர்இந்த முன்னணியின் உள் பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியும் எனத் தாம் நம்புவதாகவும் மேலும் கூறினார்.

## சோவியத்துக்கு வி.பி.சிங் பயணம்

(புதுடில்லி)

முன்னர் திட்டமிட்ட படி இந்திய பிரதமர் வி. பி. சிங் சோவியத்யூனியனுக்கு 23 ஆம் திகதி பயணமாவர் என இந்திய வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தேசிய முன்னணி அரசில் ஏற்பட்ட பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளதால் பிரதமரின் பயணம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## நக்ஸலைட்டுக்கள் கடத்தல்

(திருவாந்தபுரம்)

ஆந்திரப் பிரதேசத்தில் நான்குஅரசஊழியர்களை நக்ஸலைட்டுக்கள் கடத்திச்சென்றுள்ளனர். பொலிஸார் இவர்களை தேடிவருகின்றனர்.

கைதுசெய்யப்பட்ட தீவிரவாதி ஒருவரை நீதிமன்றத்தில் ஆஜராக்குமாறு கோரியே இந்தக் கடத்தல் சம்பவம் இடம்பெற்றது,

## சுன்னாகம் தபால் ஊழியர் உதவி

(சுன்னாகம்)

சுன்னாகம் தபாலகத்தில் கடமையாற்றுவோர் சுன்னாகம் புனித அந்தோனியார் தேவாலயத்தில் தங்கியுள்ள அகதிகளுக்கு ரூபா ஆயிரம் பணஉதவி வழங்கியுள்ளனர்.

மேலும் இவ்வாறான உதவிகளைத் தொடர்ந்து செய்வதற்கு ஊழியர்கள் மத்தியில் பணம் திரட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## கனடா அரசு அகதிகளுக்கு உதவி

(கொழும்பு)

கனடிய அரசு சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான நிவாரண உதவிகளை வடக்கு கிழக்கு பகுதி அகதிகளுக்கு வழங்கவுள்ளது.

இவை சர்வோதய இயக்கத்தின் மூலமாக அகதிகளுக்கு வழங்கப்படவுள்ளது என அரசாங்கம் அறிவித்தது.

## மலேஷிய பாஸ்போட்டுகளுடன்

# ஒன்பது இலங்கையர்கள் கோலாலம்பூரில் கைது

(கோலாலம்பூர்)

ஒன்பது போலி மலேஷிய பாஸ்போட்டுகள் வைத்திருந்த ஒன்பது இலங்கைப் பிரஜைகளை மலேஷிசிய பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இங்குள்ள வாடகை வீடு ஒன்றில் இவர்கள் தங்கியிருந்த போது பொலிஸார் அந்த வீட்டை சோதனையிட்டு பாஸ்போட்டுகளை கைப்பற்றினர்.

மலேஷிய பாஸ்போட்மூலம் கனடா, மேற்கு ஜேர்மனி போன்ற நாடுகளுக்கு இவர்கள் சுலபமாக பயணம் செய்ய முடியும் என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இவர்கள் ஐயாயிரம் முதல் பத்தாயிரம் மலேஷிய டாலர்களை செலவு செய்து இந்த பாஸ்போட்டுகளை பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## அகதிகளுக்கு வசதியீனம்

(விசேட நிருபர்)

குருநகரில் இருந்து மண்ணித்தலை புனித செபஸ்தியார் ஆலயத்தில் அகதிகளாக தஞ்சமடைந்த ஆயிரம் குடும்பங்களும் உணவு, குடிநீர், வைத்திய வசதி என்பன கிடைக்காமல் அவதியுறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

தஞ்சமடைந்த ஒரு மாத காலத்துள்ளும் பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவால் குடும்பத்துக்கு ஐந்து கிலோ அரிசி மாத்திரமே வழங்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

(21)

# பரீட்சையை ஒத்திவைக்குமாறு மாணவர் ஒன்றியம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கிலும், கிழக்கிலும் இலங்கை அரசினால் தமிழ் மக்களுக்கு எதிராக யுத்தத்தை ஏவி விட்டு இன அழிப்பினை மேற்கொள்ளும் இச்சூழ்நிலையிலும் க. பொ. த (உயர் தர) பரீட்சைக்கு தோற்ற முடியாமைக்கான கட்டுக் காரணங்களை முன்வைத்துப் பரீட்சையை ஒத்திவைக்குமாறு தமிழ் பேசும் மாணவர் ஒன்றியம் அரசாங்கத்தைக் கோரியுள்ளது. இதற்கு அரசாங்கம் இணங்காத சந்தர்ப்பத்தில் மாணவர்களாகிய தாம் பரீட்சையைப் பகிஷ்கரிப்பதைத் தவிர மாற்றுவழியில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் கல்விப்பணிப் பாளர்கள், ஆசிரியர்சங்கங்கள், பாடசாலைஅபிவிருத்திசங்கங்கள், அதிபர் சங்கம், பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம், மறுமலர்ச்சிக் கழகம் ஆகிய கல்வியோடு தொடர்புடைய ஸ்தாபனங்கள் உட்பட யாழ். பல்கலைக்கழக உபவேந்தருக்கும் மாணவர் ஒன்றியம், மகஜரின் பிரதிகளைச் சமர்ப்பித்து தமது நியாயமான இக்கோரிக்கைக்கு பூரண ஆதரவையும், ஒத்துழைப்பையும் வழங்கும்படி கேட்டுள்ளது.

# மாதாகோவில் முன்பாக சீனி,மா விநியோகம்

(யாழ்ப்யாணம்)

ஆஸ்பத்திரி வீதியில் அடைக்கல மாதா கோயிலுக்கு முன்னால் வர்த்தகர்ஒருவர் நேற்று முன்தினம் காலையிலிருந்து பாவனையாளருக்கு தலா இரண்டு கிலோமாவும், ஒரு கிலோ சீனியும் விற்பனை செய்தார். மேற்படி பண்டங்களை வாங்குவதற்காக சுமார் ஆயிரம் பேர் எறிக்கும் வெயிலிலும் வரிசையில் நின்றனர்.

காலை ஒன்பது மணியளவில் வரிசையில் நின்ற ஒருவர் இரண்டு மணியளவில் பண்டங்களை வாங்கக்கூடியதாக இருந்தது. விற்பனைப் பண்டங்களை குறிப்பிட்ட எடையில் பொதியாகக்கட்டி விற்பனைசெய்திருந்தால்வீண் சிரமத்தையும், காலதாமதத்தையும் தவிர்த்திருக்கலாம் என்று பாவனையாளர் தமக்குள் பேசிக்கொண்டனர்.

## செஞ்சிலுவைச் சங்கத்திற்கு புகார்

# உணவுப் பொருள் இன்றி நெடுந்தீவு மக்கள் அவதி

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் உணவுப் பொருட்களுக்கான தட்டுப்பாடு காரணமாக மக்கள் பணம் பண்டங்களைத் தேடி அலைகின்றனர். அதற்கும் மிகுந்த தட்டுப்பாடு நிலவுகின்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து உணவுப்பொருட்களைப் பெறுவதில் ஏற்பட்டுள்ள சிரமங்கள் அதிகரித்துள்ளன. நெடுந்தீவு மக்களின் போக்குவரத்து வசதிகளுக்கான படகுகள் கடற்படையினரால் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இதனால் குழந்தைகளுக்கான பால்மா, மற்றும் மருந்து வகைகள், உணவுப்பொருள்களைப் பெறமுடியவில்லை.

தனியார் படகுகளில் பிரயாணம் செய்வதையும், மீனவர் கடற்கரையில் மீன்பிடிப்பதையும் கடற்படையினர் தடைசெய்துள்ளனர். அதே வேளை அரச படகுச் சிப்பந்திகள் கடற்படையினரால் கொண்டு செல்லப்பட்டுள்ள படகுகளுடன் தடுத்து வைக்கப்பட்டுள்ளதால், எஞ்சிநிற்கும் ''குமுதினி'' அரசாங்க மோட்டார் படகினை இயக்க முடியாதுள்ளது.

அத்துடன் கடும் நோயாளிகளை யாழ்ப்பாணம் ஏற்றிச் செல்வதிலும் கஷ்டங்கள் உள்ளன. இவை குறித்து நெடுந்தீவு செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள், யாழ்ப்பாணக் கிளை அலுவலகத்திற்கு உதவி கோரி விண்ணப்பித்துள்ளனர்.

(62)

Registered News Paper at the G. P. O.

ஈழநாதம்

## அகதிமுகாமில் நால்வர் கைது

ஆலங்கேணி அகதி முகாமினுள் புகுந்த படையினர் அங்கிருந்து செல்லையா நோமன், சின்னையா கனகசிங்கம், சிவ ஞானம் கோணமலை, சின்னத்தம்பி ஆகிய நால்வரையும் விசாரணைக்காக அழைத்துச் சென்றனர்.

# மக்கள் வேறு புலிகள் வேறல்ல; ஒன்றிணைந்தாலே நமக்கு வெற்றி

- யோகி

"தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் பல்லாயிரக் கணக்கான போராளிகள் இருக்கிறார்கள்; போராட்டத்தில் அவர்கள் எல்லோரினதும் மனோநிலை ஒன்றுதான். முழுமையாக எல்லோரும் இணையும்போதுதான்போராட்டம் வெற்றிபெறும். தமிழீழ விடுதலைப்புலிகள் வேறு, மக்கள் வேறு என்பது சிலரது அபிப்பிராயம். ஏன் இந்த மனோநிலை ஏற்படுகின்றது? பார்வையில் பெரிய பிழை அமைந்துள்ளமையால் தான் இந்த அடிமைத்தனமான சிந்தனை. காலாட்படை, கடற்படை, விமானப்படை ஆகிய முப்படைகளுக்கும் ஆயுதம் தந்து, சிங்களவர்களுக்கும் ஆயுதம் வழங்கி, மருத்துவமனைகளைத் தாக்கியும், பாலியல் வன்முறைகளில் ஈடுபட்டுள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தையும், போராளிகளையும் சமநிலையில் வைத்துச் சிலர் பார்க்கிறார்கள். இது தவறான அபிப்பிராயமாகும். விடுதலைப் புலிகள் மக்களின் சுதந்திரத்துக்காக, மண்ணின் விடுதலைக்காகப் போராடுகிறார்கள். சொத்துச்சுகத்துக்காகப் போராடவில்லை''.

இவ்வாறு நேற்றுக்காலை நல்லூரில் திவ்விய ஜீவனசங்க மண்டபத்தில் நடந்தகரும்புலிகளுக்கான அஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் யோகரட்ணம் (யோகி) பேசும் போது தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கத்தலைவர் ஆ.மு. இராஜகோபால் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

யோகரட்ணம் (யோகி) தொடர்ந்து பேசும் போது கூறியதாவது:

போராட்ட காலத்தில், போராட்டத்தைப் பற்றிய மக்களின் மனோநிலை மாற வேண்டும். மக்களுக்குஒப்பீட்டு ரீதியான மனோநிலை வேண்டும். அரசாங்கம் பொருளாதாரத் தடையைக் கொண்டு வந்து எரிபொருளையும், மருந்து வகைகளையும், உணவுப் பண்டங்களையும் இல்லாமல் செய்யலாம். மக்கள் மாறிச் சிந்திக்க வேண்டும். பொருளாதாரத் தடைக்கு எதிராக எப்படிப் போராடலாம் என்று சிந்திக்க வேண்டும். எமதுமண்ணில் விளையக்கூடிய விளை பொருள் எமக்குப் போதும்.

நாம் ஒரு மாயையில் வாழ்கின்றோம். இந்த மண்ணில் வளம் இருக்கின்றது. எமக்குத்தேவையானதை எமது பூமியில் உற்பத்தி செய்யலாம். எந்த ஒரு பெருமுயற்சியும் இல்லாமலேயே எமக்குத் தேவையானவற்றை நாம் உற்பத்தி செய்கிறோம். பொருளாதாரத் தடைக்கெதிராக மாற்று வழிகளை, பிரதியீடுகளை நாம் முன்வைக்க வேண்டும்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: பேச்சு வார்த்தை என்கிறீர்கள். பேச்சு வார்த்தை மூலம் ஆதிக்கமுள்ள ஒரு காவல் படையைப் பெற முடியாதுஎங்கள்பாது காப்புக்கு ஒரு தேசியப் படை வேண்டும். ஒரு நாட்டிலே இரு தேசியப் படை இருக்க முடியாது ஆகவே நாடு பிரிய வேண்டும்.

போராளிகளைத்தாருங்கள் தரமுடியாதவர்கள் எம்முடன் இணைந்து கொள்ளுங்கள். வேறு கஷ்டங்கள் உள்ளவர்கள் ஏதாவது வழியில் பங்களிப்புச் செய்ய வேண்டும். எவரும் போராட்டத்திலிருந்து இனிமேல் பிரிந்து நிறக முடியாது.

## நயினாதீவில் இருந்து மக்கள் வெளியேற்றம்

(தீவுப்பகுதி)

நயினாதீவிலிருந்து மக்கள் தற்போது வெளியேறத் தொடங்கியுள்ளனர். நயினாதீவு கடற்படையினரால் தாம் எந்நேரமும் தாக்கப்படலாம் என அஞ்சியே இவ் வெளியேற்றம் இடம் பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது. இடம் பெயரும் மக்கள் புங்குடுதீவுப் பகுதிகளில் தஞ்சமடையத் தொடங்குகின்றார்கள். கடந்த சில தினங்களிற்கு முன்னர் நயினாதீவு கடற்படை முகாமிற்கு அருகில் ஒருவர் கொல்லப்பட்டதே இம்மக்களின் அச்சத்திற்குக் காரணமெனவும் கருதப்படுகிறது. இதே வேளை நயினாதீவு கடலில் இருந்து கடற்படையினர் அடிக்கடி பீரங்கித்தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றார்கள். இதனால் சிலர் காயமடைய நேரிட்டுள்ளதாவும் தெரிவிக்கப்படுகிறது. (15)

## புலிகளைப்பணியவைக்கவே இராணுவ நடவடிக்கை

### உயர்கல்வி அமைச்சர் லலித்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளைப்பணிய வைக்கும் அடிப்படையிலேயே வடக்கு கிழக்கில் தற்பொழுது இராணுவநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக உயர்கல்வி அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார். வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

## யுத்தகால நிலை கருதி குறுங்கால பயிர்ச் செய்கை

## வைத்தியர்களின்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது.

இதனையடுத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் மேற்படி கடிதத்தின் பிரதி ஒன்றை யாழ் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு அனுப்பி சகல அரசாங்க வைத்தியர்களினதும் தற்போதைய நிலையை விளக்குமாறு கேட்டுள்ளனர்.

## மாணவர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரியில் கல்வி பயிலும் 90 ஆம் ஆண்டு பரீட்சை எடுக்கும் சகல உயர்தர வகுப்பு மாணவர்களையும் அக்கல்லூரியில் இன்று காலை 10.00 மணிக்குத் தவறாது சமுகமளிக்கும் படி தமிழ் பேசும் மாணவர் ஒன்றியம் கேட்டுக் கொள்கிறது.

## இலங்கை

1ஆம் பக்கத் தொடர்ச்சி)

படகுகள் ஒருவாறு தப்பிக் கொண்ட போதும் இரண்டு படகுகள் பலத்த சேதமடை

## கல்வி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளரையும் சந்தித்து எப்போது யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்கப்படும் எனவும், இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கு எப்போது சம்பளம் வழங்கப்படும் எனவும் கலந்துரையாடி முடிவுகள் எடுக்கவுள்ளனர்.

வடக்குக் கிழக்குக்கு இடம் பெயர்ந்த ஆசிரியர்கள் தாங்கள் எம்மாவட்டத்திற்கு இடம் பெயர்ந்துள்ளனரோ, அம்மாவட்டக் கல்விப் பணிப்பாளருடன்தொடர்புகொண்டு ஜூன் மாதச் சம்பளத்தைப் பெறலாமெனவும் பொதுச் செயலாளர் தெரிவித்தார்.

## மாங்குளத்தில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை நேற்று மாங்குளம் இராணுவ முகாமிற்குள் ஹெலியை இறக்குவதற்கு சிறிலங்கா விமானப்படையினர் எடுத்துவரும் பெரும் முயற்சியைத் தொடர்ந்து புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் மீண்டும் கடும்சண்டை மூண்டது.

நேற்றுப்பகல் 12 மணியளவில் ஒரு அவ்ரோவும், மூன்று பொம்மர்களும், நான்குஹெலிகளுமாகச் சேர்ந்து ராணுவ முகாமைச் சுற்றியுள்ள பகுதிகளில் பலமணிநேரம் குண்டு வீச்சுத் தாக்குதல்களையும், துப்பாக்கிச்சூட்டுத் தாக்குதல்களையும் நடத்தின.

ராணுவ முகாமிற்குள் ஹெலியை இறக்கும் முயற்சியாகவே இத்தாக்குதல் நடத்தப்பட்டது. ஹெலிகளை இறங்கவிடாது விடுதலைப்புலிகள் எதிர்த் தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் ஜசின் (சமணன்-குளம்) என்பவர் வீரமரணம் அடைந்துள்ளார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். (ம)

## அம்பாறையில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முகாம் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல் தொடுத்து அந்த முகாமை துவம்சம் செய்தனர்.

இதில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். முகாம் அமைந்திருந்த கட்டிடம் தரைமட்டமாக்கப்பட்டது.

இந்த முகாமிலிருந்து ஆர். பி. ஜி. ஒன்றும் தொலைத்தொடர்பு கருவி ஒன்றும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது. மேலும் தாக்குதலில் கொல்லப்பட்ட 4 இராணுவத்தினரின் உடல்களும் கைப்பற்றப்பட்டன.

## பாரதீய

1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டில்லியில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் முன்னாள் அமைச்சர் அடல் பிகாரி வாஜ்

## களம்பல . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீரமரணம் அடைந்தார்.

இவர் மட்டக்களப்பு வெல்லாவெளியைச் சேர்ந்தவராவார்.

லெப்-கேர்ணல் றேகன் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தில் விடுதலைப்புலிகள் மேற்கொண்டபெரும்பாலான தாக்குதல்களில் கலந்து கொண்டவர்.

ஆரம்பத்தில் களுவாஞ்சிக்குடிப் பொறுப்பாளராகவும் பின் மட்டக்களப்புப் பொறுப்பாளராகவும் கடமையாற்றிய லெப். கேர்ணல் றேகன் இந்தியப்படையுடனான யுத்தத்தின் போது மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட துணைத் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

1985, 86ஆம் ஆண்டுகளில் விடுதலைப்புலிகள் கொக்கட்டிச்சோலையை கட்டுப்பாட்டில் வைத்திருந்த போது களுவாஞ்சிக்குடி, வெல்லாவெளி இராணுவ முகாம்களிலிருந்து இராணுவத்தினர் கொக்கட்டிச்சோலைக்குள் நுளையாதவாறு வியூகமமைத்து காவலிருந்தார்.

அண்மையில் மாங்கேணி இராணுவ முகாம் மீதான தாக்குதலிலும் கொக்கட்டிச் சோலை தம்பட்டை ஆகிய இடங்களில் பவல் ரக வாகனங்கள் சேதப்படுத்தப்பட்ட தாக்குதலிலும் முக்கிய பங்கு வகித்தவர் லெப். கேர்ணல் றேகன்.

இவரைஇந்தியப்படையினர் பலமுறை உயிருடன் பிடிப்பதற்கு பெருமுயற்சி செய்தனர் இலங்கைப் படையினரும் இந்தியப்படையினரும்பலதடவைகள் றேகனைத்தாம் கொன்றுவிட்டதாகப் பொய்ப்பிரசாரம் செய்து பெருமைப்பட்டுக் கொண்டனர்.

பயிற்சி முகாம்களில் ஏராளம் விடுதலைப்புலி வீரர்களுக்கு பயிற்சி வகுப்புக்களை நடாத்தியவர் லெப்-கேர்ணல் றேகன்.

அவரது குடும்பத்தினரும் உறவினருமாக மொத்தம் 27 பேர் ஐந்து ஆண்டுகளுக்குமுன் ஸ்ரீலங்கா விசேட அதிரடிப் படையினரால் வெறித்தனமாக வெட்டிக் கொல்லப்பட்டனர். இச்சம்பவத்தினால் றேகனின் குடும்பத்தைசேர்ந்த அனைவரும் கொல்லப்பட்டு விட்டனர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

## வேண்டுகோள்

வண்ணார்பண்ணை வடமேற்கு (கி.சே.பி. J/49 பழையது) சிற்றூரவையும் சேர்ந்த தமிழீழ மண்மீட்பு நிதிக்கான கடன் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளத் தவறியவர்கள் இப்பத்திரத்தைப்பெற்றுப்பூர்த்தி செய்வதுடன் இக்கடன் பத்திரத்தைப் பெற்றுப் பூர்த்தி செய்து ஒப்படைக்காதவர்கள் பூர்த்திசெய்து சமர்ப்பிக்கவும். இவ்விரு பகுதியினரும் ஞாயிற்றுக்கிழமை 22.7.90 இல் இலக்கம் 15(29) ராதா ஒழுங்கை (ஓடை ஒழுங்கை) வண்ணார் பண்ணையில் காலை9.00மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை சமுகமளிக்கவும் என வண். வடமேற்கு சிற்றூரவை கேட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

### சிவானந்தன் - சந்தானமலர்

மீசாலை தெற்கு சிற்றூரவை உபதலைவரான மீசாலை தெற்கைச்சேர்ந்த சிவானந்தன்-சந்தானமலர் (சாந்தி) 17.7.90 அன்று காலமாகி விட்டார். இவர் சதாசிவம் சிவானந்தனின் அன்பு மனைவியும் செந்தூரன் மயூரன், ரமணன், லக்ஷியாவின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற பொன்னம்பலம் சின்னம்மா (தில்லையம்மா) வின் அன்பு மகளும், காலஞ்சென்ற கனகசபை-சதாசிவம் விதானையாரின் மருமகளும் ஆவார். அன்னாரின் தகனக்கிரியை நேற்று 18.7.90 (புதன்கிழமை) மாலை வேம்பிராயில்நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ப. சிவநாதன்
(R-533)

## மரண அறிவித்தல்

### திரு. சரவணை நாகலிங்கம்

தொடங்குகின்றார்கள். கடந்த சில தினங்களிற்கு முன்னர் ... வும் தெரிவிக்கப்படுகிறது. (15)

# புலிகளைப்பணியவைக்கவே இராணுவ நடவடிக்கை

## உயர்கல்வி அமைச்சர் லலித்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளைப்பணிய வைக்கும் அடிப்படையிலேயே வடக்கு கிழக்கில் தற்பொழுது இராணுவநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக உயர்கல்வி அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

இராணுவநடவடிக்கைகள்மேற்கொள்ளப்படினும்கூட அரசியல் நடவடிக்கையின் மூலமே வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

## குரும்பசிட்டியில் வீடுகள் சேதம்

(தெல்லிப்பளை)

கடந்த மூன்று நான்கு தினங்களாக பலாலி இராணுவ முகாமிலிருந்து குரும்பசிட்டிப் பகுதியை நோக்கி மேற்கொள்ளப்பட்ட வெறித்தனமான ஷெல் வீச்சினால் பல வீடுகளும், ஈழகேசரி பொன்னையா வீதியில் சில இடங்களும் சேதமுற்றன.

கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர். எஸ். அகிலானந்தன், திரு. மு. குணரத்தினம் ஆகியோருக்கு சொந்தமான குடியிருப்புக்களும் திரு. வைரமுத்து இராசரத்தினத்திற்குச் சொந்தமான மூன்று மாடிக்கட்டிடத்தின் மேற்பகுதியும் சேதமடைந்தன. அத்துடன் பல வீடுகள் சேதமுற்றும் உள்ளன. (26)

## யுத்தகால நிலை கருதி குறுங்கால பயிர்ச் செய்கை

(நல்லூர்)

யாழ். மாநகர சபை ஊழியர்கள் யுத்தகால நிலை கருதி குறுங்கால பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

மாநகர சபை அலுவலக கட்டிடத்தின் பின் வளவிலும் திருநெல்வேலி நீர்வழங்கல் பகுதி அமைந்துள்ள காணியிலும் தற்போதய காலகட்டத்தின் உணவு தேவை கருதி சிறு பயிர் செய்கையை இவர்கள் மேற் கொண்டு வருகின்றனர். இவ் ஊழியர்கள் தமது கடமை நேரம் தவிர மேலதிகமாக தோட்டவேலைகளில் ஈடுபட்டு உணவு உற்பத்தியை பெருக்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும். (லோ)

## யாழ். மாநகரசபை அகதிகளுக்கு 1 லட். ரூபா ஒதுக்கீடு

(நல்லூர்)

இராணுவ நடவடிக்கைகளால் பிறமாவட்டங்களில் இருந்து வந்த குடும்பங்களுக்கு பாலுணவு, மற்றும் ஜீவாகார உணவு வகைகளை கொள்வனவு செய்து கொடுக்கமாநகர சபை நலன்புரி மன்றம் ஒரு லட்சம் ரூபாவை சேகரித்துள்ளது.

இதற்கு முதல் ஏற்பாடாக இன்று பத்தொன்பதாம் திகதி வியாழக்கிழமை குறிப்பிட்ட சில முகாம்களுக்கு இந்த நலன்புரி சங்கம் திரட்டிய நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட உணவு வகைகள் சிலவற்றை விநியோகம் செய்யப்பட உள்ளது. (லோ)


வாடிக்கையாளர்களின் கவனத்திற்கு

நியூ லலிதா ஜுவல்லர்ஸ்

74/1 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

எமது ஸ்தாபனம் வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க தற்போது நிலவும் நாட்டின் நிலைமை காரணமாக தினசரி காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 1.00 மணிவரை திறந்திருக்கும் என்பதை அறியத்தருகிறோம்.

இங்ஙனம்
நியூ லலிதா ஸ்தாபனத்தார்

(B 1258)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது


### வைத்தியர்களின்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது.

இதனையடுத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் மேற்படி கடிதத்தின் பிரதி ஒன்றை யாழ் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு அனுப்பி சகல அரசாங்க வைத்தியர்களினதும் தற்போதைய நிலையை விளக்குமாறு கேட்டுள்ளனர்.

### கைதான ஆறு . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 12ஆம் திகதி இந்த ஆறுபேரும் கைதுசெய்யபட்டு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

குருசாமி துரைரட்ணம், அழகையா ஆனந்தன், செல்டன், கந்தையா அந்தோனி, சிவராசா, டக்ளஸ் ஆகியோரே இவ்வாறு கைதாகிதிரும்பவில்லை.

### பாதுகாப்பு நிதிக்கு . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சில இந்த நிதிசேகரிப்பில் ஈடுபட்டுவருவதாகவும், அவ்வாறு சேகரிக்கப்பட்ட நிதி உரியவர்களுக்கு வந்துசேருவதில்லை எனவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதையடுத்து அரசாங்கம் இவ்வாறு அறிவித்துள்ளது. இதனால் நிதிசேகரிப்பு நடவடிக்கைகள் குறித்து பொதுமக்களுக்கு எச்சரிக்கப்பட்டுள்ளது.

### நேற்றும்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை மனதார ஏற்றுக் கொண்ட பயணிகள்; மேலும் வழியனுப்ப வந்தவர்களிடம் விடைபெற்று கண்களில் கண்ணீர்சொரிய பயணத்தை ஆரம்பித்தனர். (லோ)

## மாணவர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரியில் கல்வி பயிலும் 90 ஆம் ஆண்டு பரீட்சை எடுக்கும் சகல உயர்தர வகுப்பு மாணவர்களையும் அக்கல்லூரியில் இன்று காலை 10.00 மணிக்குத் தவறாது சமுகமளிக்கும்படி தமிழ் பேசும் மாணவர் ஒன்றியம் கேட்டுக் கொள்கிறது.

### இலங்கை

1ஆம் பக்கத் தொடர்ச்சி)

படகுகள் ஒருவாறு தப்பிக் கொண்ட போதும் இரண்டு படகுகள் பலத்த சேதமடைந்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது

காயமடைந்த இந்த இரண்டு மீனவர்களும் இராமநாதபுரம் வைத்திய மனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை இந்திய மீன்பிடிப் படகு ஒன்றும் ஐந்து மீனவர்களுடன் காணாமல் போய்விட்டதாகவும் இந்திய வானொலி அறிவித்துள்ளது.

### அடக்குமுறை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

துத்தெரிவித்த புதுச்சேரி முதல்வர் ஹர்த்தாலை முன்னிட்டு நாளைய தினம் பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறியதுடன், அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த அனைத்துக்கருமங்களும் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்தோடு இலங்கையில் அப்பாவி தமிழ் மக்கள் மீது நடத்தப்படும் இன படுகொலை உடைமை அழிப்புக் குறித்து புதுச்சேரி முதலமைச்சர் திரு. டி. இராமச்சந்திரன் தமது பலத்த கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

முதல்வர் தனது கண்டனத்தில் இலங்கை அரச படையினரால் தமிழ் மக்கள் ஈவிரக்கமற்ற முறையில் கொல்லப்பட்டு வருவதாகவும், ஆயிரக்கணக் கானோர் சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமிழ்நாட்டில் நாளை நடத்தப்படவுள்ள ஹர்த்தாலுக்கு அனைத்துக் கட்சிகள் மாத்திரமன்றி, அனைத்து மக்களும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று தமிழ்நாடு ஜனதாதள் விடுத்துள்ள அறிக்கையொன்றில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

### போதைவஸ்து

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

போதைவஸ்து வியாபாரத்தைத் தமக்கு இனங்காட்டி உதவுமாறு மக்களை கேட்டுள்ளார்கள்.

னர் கொல்லப்பட்டனர். முகாம் அமைந்திருந்த கட்டிடம் தரைமட்டமாக்கப்பட்டது.

இந்த முகாமிலிருந்து ஆர். பி. ஜி. ஒன்றும் தொலைத்தொடர்பு கருவி ஒன்றும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது. மேலும் தாக்குதலில் கொல்லப்பட்ட 4 இராணுவத்தினரின் உடல்களும் கைப்பற்றப்பட்டன.

### பாரதீய

1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டில்லியில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் முன்னாள் அமைச்சர் அடல் பிகாரி வாஜ்பேயும் கலந்து கொண்டார். இந்தச் சந்திப்பில் வடக்கு, கிழக்கு நிலைமை குறித்துக் கதைக்கப்பட்டதுடன், வடக்குக்கிழக்குப் பகுதிகளின் நிலைமைகளை பாரதீய ஜனதாதள் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு நேரில் வந்து ஆராயலாம் என்று இலங்கைப் பிரதிநிதிகள் குழு தரப்பில் கூறப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைப் பிரதிநிதிகள் குழுவின் இந்த யோசனையை திரு. வாஜ்பேய் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### முப்படைகளின்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி

தாக்குதல் நடத்தி மூழ்கடித்தமையால் பெரும்பாலான மக்கள் கடலிலேயே கொல்லப்பட்டனர். இதன்காரணமாக இந்தியாவிற்கு அகதிகளாகச் செல்லவேண்டாம் என்று விடுதலைப்புலிகள் தடுத்து வருகின்றனர். இதனால் இங்கிருந்து இந்தியாவிற்குச் செல்லும் அகதிகளின் தொகை தற்பொழுது வெகுவாகக் குறைந்துள்ளதாகத் தெரியவருகின்றது.

### அகதிகளுக்கு

(1ஆம் பக்கத் தெடர்ச்சி)

கத்திடம் 1500 குடும்பங்களுக்காவது உதவி செய்யும்படி கேட்டுள்ளேன். அவர்கள் உதவி செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

இதுதவிர செஞ்சிலுவைச் சங்கத்திடம் உணவுப் பொருட்கள், மருந்து வகைகளை கொழும்பில் இருந்து கொண்டுவந்தாவது தரும்படி கேட்டுள்ளேன். கொழும்பில் இருந்து பொருட்கள் வந்ததும் உதவிசெய்வதாக செஞ்சிலுவைச் சங்கம் உறுதியளித்துள்ளது.

இவை வெகு விரைவில் இம்மாவட்டத்திற்குக் கிடைக்குமென நம்புகிறேன். அதில் கிளிநொச்சி அகதிகளுக்கும் வழங்க ஆவனசெய்வேன் என்றார். (49)

சதாசிவம் சிவானந்தனின் அன்பு மனைவியும் செந்தூரன் மயூரன், ரமணன், லக்ஷியாவின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற பொன்னம்பலம் சின்னம்மா (தில்லையம்மா) வின் அன்பு மகளும், காலஞ்சென்ற கனகசபை-சதாசிவம் விதானையாரின் மருமகளும் ஆவார். அன்னாரின் தகனக்கிரியை நேற்று 18.7.90 (புதன்கிழமை) மாலை வேம்பிராயில்நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ப. சிவநாதன்

(R-533)

## மரண அறிவித்தல்

### திரு. சரவணை நாகலிங்கம்

மலேஷியா தபால் சேவைப்பகுதி ஓய்வூதியகாரர் திரு. சரவணை நாகலிங்கம் சிவபதம் எய்தினார். இவர் சிங்கப்பூர் திருமதி ந. பத்மாவதியினதும் திருமதி ப. யோகவதியினதும் அருமைத்தந்தையும் சிங்கப்பூர் எழுதுவினைஞர் திரு. க. நடராசாவினதும் காங்கேசன்துறை ஓய்வுபெற்ற தலைமை றெயில் பாதுகாவலர் திரு. நா. பரதராசாவினதும் அருமைமாமனாரும் ஆவார் இறுதிக்கிரியைகள் வடக்கு அளவெட்டி சீனன் கலட்டி பாடசாலை அயலில் உள்ள பணிக்கன் தோட்டம் வளவில் 18.7.90 இல் நடந்தேறியது. உற்றார் உறவினருக்கு இதனை அறியத்தருகின்றோம்.

நா. பரதராசா
(ஓய்வுபெற்ற தலைமை றெயில் பாதுகாவலர்)
வடக்கு அளவெட்டி

(R-531)

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் கணேசபிள்ளை

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், பிறவுண் வீதி வாசியுமான நாகலிங்கம் கணேசபிள்ளை (R. M. O. பொத்துவில் அரசினர் வைத்தியசாலை) பொத்துவிலில் அகால மரணமானார். இவர் குகச்செல்வியின் அன்புக் கணவரும், கிரிதரன், தனசுதன் (கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற K. நாகலிங்கம், குணமாலை ஆசிரியர், 11 ஆம் வட்டாரம், புங்குடுதீவு, பாக்கியம் அவர்களின் அன்பு மகனும், அருளம்பலம் சோமாஸ்கந்தர் (முன்னாள் மேக்கன்ரைல் வங்கிக் குமாஸ்தா), கௌரியம்மா அவர்களின் அன்பு மருமகனும், மீனாம்பாள், செல்லத்துரை, தனலட்சுமி, கெங்காதரம்பிள்ளை, நகுலேசபிள்ளை, சந்திரசேகரம், கனகலட்சுமி சண்முகநாதன், இராசலட்சுமி தர்மலிங்கம், முருகபூபதி, தணிகாசலம், ஞானசேகரம், குலசேகரம், சிவசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், குகேந்திரரூபன், அற்புதரூபன், நிரூபன், சொரூபவதி ஆகியோரின் மைத்துனருமாவார். உற்றார், உறவினர் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: அ. சோமாஸ்கந்தர்,
212, செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு,
நல்லூர்.

(R 532)